திருவள்ளுவர் ஆண்டு 2036

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 5 மே 2005

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

மே-05

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே.திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திரு. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.பி.எச்.டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு.க.சின்னப்பா, எம்.ஏ., பி.எச்.டி., | உறுப்பினர் |
| பல்கலைக்கழக உறுப்பினர் | |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 99
பகுதி : 5
மே 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 93

அருளிச்செயல் கோட்பாடுகள் 95

பேராசிரியர் முனைவர். இரா.அரங்கநாதன்

பெரியபுராணமும் சீவகசிந்தாமணியும் 101

அறிஞர்.தி.வே.கோபாலையர்

சிலப்பதிகாரக் கருத்தரங்கு 115

பேராசிரியர் முனைவர் கி.நாச்சிமுத்து

பெரியபுராணக் காப்பிய ஒருமை 122

பேராசிரியர் முனைவர் சுப.அண்ணாமலை

# இதழ்மணம்

பேராசிரியர் இரா.அரங்கநாதன் அவர்களுடைய அருளிச்செயல் கோட்பாடுகள் 7ஆம் பகுதி இவ்விதழில் வெளிவருகிறது. இராமாயணத்தோடு திருவாய்மொழியை ஒப்பிலக்கியபார்வையில் திறனாய்வு செய்கிறார். வான்மீக முனிவர் நான்முகப்பிரமாவின் அருள் பெற்றவர் நம்மாழ்வார் தனிமுதற்கடவுளான திருமாலின் திருவருள் பெற்றவர் என்பது உயர்ந்தோர் முடிவு என்பதைப் பேராசிரியர் எடுத்துரைத்திருப்பது ஆழ்ந்த பொருள் பொதிந்ததாகும்.

நம்பிள்ளை வடமொழி இராமாயணத்துள் காணப்படும் இலக்கணங்களையும் தமிழ் அகப்பொருள் இலக்கணங்களையும் ஒப்புநோக்கித் திருவாய்மொழித் தலைவனும் தலைவியும் உலகியல் தலைவி நிலையிலிருந்து வேறுபட்டுப் பிராட்டி நிலை எய்தி இருப்பதைக் காரணங்களுடன் எடுத்துரைக்கிறார். நம்மாழ்வார் பராங்குசநாயகியாகப் போற்றப்படும் உரைநுட்பம் திருவாய்மொழிப் பொருண்மையை உணர்ந்து இன்புறத் துணைசெய்கிறது. வடமொழிக் காப்பியம் திருவாய்மொழிப் பொருளை மேலும் அனுபவிக்கத் துணை செய்வதை ஆசிரியர் எடுத்துரைத்திருப்பது இன்புறத்தக்கது.

அடுத்துப் பேராசிரியர் தி.வே.கோபாலையர் அவர்களின் பெரிய புராணமும் சீவக சிந்தாமணியும் என்னும் தலைப்பில் அரிய பொருள் நிறைந்த கட்டுரை வெளிவருகிறது. இரண்டு பெரிய காப்பியங்களுக்குரிய உறவைப் பேராசிரியர் நுண்ணிதின் ஆய்ந்து வெளிக்கொணர்ந்துள்ளார்கள். தமிழ் இலக்கியப் பரப்பு அனைத்தையும் உள்ளத்தில் பொதிந்து வைத்துள்ள அரிய கல்விக் கருவூலம் பேராசிரியர் தி.வே.கோபாலையர் அப்பெரியார் எழுதியுள்ள எழுத்து அச்சரம் லட்சம் பெறும் என்பது போலச் சிறப்புடையது. இதனைக் கற்கின்ற மாணவர்கள் ஆசிரியர்கள் கட்டுரைப் பொருளை உள்வாங்கிக் கொள்வதற்கும் இலக்கிய இன்ப அனுபவம் பெறுதற்கும் கட்டுரையைப் பலமுறை படிக்கவேண்டும். நவில்தொறும் நூல்நயம் என்பது கட்டுரைக்கும் பொருந்தும்.

கேரளப் பல்கலைக்கழகம் மார்ச் திங்களில் மூன்று நாள் இளங்கோ விழா எடுத்துள்ளது. மூன்று நாள் நிகழ்வுகளையும் செந்தமிழ் வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறது. மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கும் போது மதுரை மாநகருக்கு பாஸ்கர சேதுபதி தம் பரிவாரங்களுடன் எழுந்தருளினார் என்பர். அதுபோல திருவனந்தபுரத்தில் நடந்த இவ்விழாவிற்கு சேர அரசர் பெருமகனார் எழுந்தருளிச் சிறப்பித்திருக்கிறார். இயல், இசை, நாடக அரங்குகள் சிறந்த முறையில் அமைந்திருக்கிறது. கேரளம் தமிழகம் சார்ந்த அறிஞர் பெருமக்கள் நிகழ்வுகளில் கலந்துகொண்டு கட்டுரை படித்திருக்கிறார்கள். இளங்கோவுக்கு பல்கலைக்கழகத்தில் ஓர் இருக்கை ஏற்படுத்த நிதி ஏற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளது. அறிஞர் வ.ஐ. சுப்பிரமணியம் நிதி அளித்துத் தொடங்கியுள்ளார்கள். இளங்கோவுக்குத் தமிழகம் எங்கும் இதுபோல திருவிழா எடுக்கவும் பல்கலைக்கழகங்களில் ஆய்வு இருக்கைகள் ஏற்படுத்தவும் அறிஞர் உலகம் செயல்படவேண்டுவோம்.

அடுத்துப் பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்களின் பெரியபுராணக் காப்பிய ஒருமை என்னும் தலைப்பின் கீழ் அன்புப்பீடத்தில் ஆவிப்பலி என்னும் பகுதி இடம் பெறுகிறது. அன்புடை நெஞ்சம் எல்லாம் திருவருட் செயலாகவே கருதுகிறது. வறுமை துன்பம் பசி அனைத்தையும் நாளும் ஏற்றுப் பணியில் உறைப்புடன் நின்ற அடியவர் பெருமை இப்பகுதியில் விளக்கப்படுகிறது. திருவருள் வழி நிற்கும் அடியார்கள் பற்றையும் உலகியலையும் வென்று திருவருள் குறிப்பு வழி ஒழுகும் பேறாற்றல் பெறும் திண்ணியர் ஆகின்ற சிறப்பைப் பேராசிரியர் இப்பகுதியில் விளக்கும் திட்பம் உளம் கொள்ளத்தக்கது.

# அருளிச்செயல் கோட்பாடுகள் - (7)

பேராசிரியர் முனைவர் : இரா. அரங்கராஜன்

## *ஒப்பிலக்கிய ஆய்வுகள் - வான்மீகமும் ஆழ்வாரும்*

அருளிச் செயல்களுக்கு உரைவரைந்த ஆசிரியன்மார்கள் வடமொழி வான்மீகி ராமாயணக் கருத்துக்கள் ஆழ்வார் பாடல்களின் கருத்துக்களோடு பெரிதும் ஒப்புமைப்பட்டிருப்பதை உணர்ந்தனர். இராமாயணத்தைச் 'சரணாகதிநூல்' என்று கண்டனர்.

ஆழ்வாருடைய நெறியும் சரணாகதித் தத்துவமாயிருப்பதை உணர்ந்தனர்; உணர்ந்து திருவாய்மொழியை 'தீர்க்க சரணாகதி' என்று போற்றினர்.

போற்றியதும், இராமாயணமும், திருவாய்மொழியும் வைணவ சமயத்தைப் போற்றிக் காக்கும் இரண்டு மதிள்களாகக் கருதப்பட்டன.

இரண்டு நூல்களும் முனிவர் இருவரால் வெளிப்பட்டவை. நான்முகக் கடவுளின் அருள் பெற்ற வான்மீகி முனிவர் செய்தது காவியமான இராமாயணம். தனிமுதற் கடவுளான திருமாலின் திருவருள் பெற்ற சடகோபமுனிவர் செய்தது அருளிச் செயலான திருவாய்மொழி.

இராமாயணத்தை வான்மீகரின் சீடர்கள் இசையிலேற்றிப் பாடினர்; திருவாய்மொழியை ஆழ்வாரின் சீடரான மதுரகவிகள் இன்னிசையால் பாடிப் பரவினார்.

வான்மீகர் இராமாவதாரமல்லது அறியார்; ஆழ்வார் குரவையாச்சியர் என்ற திருவாய்மொழியில் வான்மீகரைப் போன்று கிருஷ்ணாவதாரமல்லது அறியார். இவ்வாறு இருவருடைய மனநிலைகளையும் உரையாசிரியர் நம்பிள்ளை ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

## *தலைமைப் பண்புகள் ஒப்புநோக்கு*

தலைமகன் தலைமகளுக்குரிய தலையாய பண்புகளைத் தமிழ் அகப்பொருள் நூல்கள் வரையறுக்கின்றன.

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல்.களவியல் 98) என்றும்

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப." (தொல்.களவியல் 99)

மெய்ப்பாட்டியலில், கற்பினுள் அழிவில் கூட்டம் நிகழ்ந்த பிறகு தலைவிபால் ஏற்படும் மெய்ப்பாடுகளைச் சொல்லுமிடத்துத் தலைவன் தலைவியர் இருவருக்குமிடையே உள்ள ஒப்பு பத்து வகைப்படும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

அவை : பிறப்பு, குடிமை, ஆண்மை, யாண்டு, உருவு நிறுத்த காம வாயில், உருவு, நிறை, அருள், உணர்வு, திரு என்பனவாம் (தொல். மெய்ப். 25)

களவியல் உரைகாரர் உரையிற் கோடல் என்ற உத்தி கொண்டு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்றும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்றும் முறையே தலைமகன் தலைமகளுக்குரிய பண்பு நலன்களைக் கூறினார். (இறையினார் களவியல், ஆத் 2)

திருவாய்மொழிப் பேருரையாளர் நம்பிள்ளையோ எனின், வடமொழிக் காப்பியமான் இராமாயணத்துள் கூறப்படும் இலக்கணங்களையும் உடன் ஒப்புநோக்கித் தமிழ் அகப்பொருள் தலைவன் தலைவியர்க்கும் அவற்றைச் சார்த்திக் கூறுகிறார். அது வருமாறு :-

"அஃதாவது, துல்ய சீல வயோ வ்ருத்தாம் - என்று சீலத்தாலும் வயஸ்ஸாலும் அபிஜநத்தாலும் வடிவழகாலும் ஸம்பத்தாலும் குறைவற்றிருப்பன இரண்டு விஷயமாய், அது தன்னில் அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்றாற் போலே சொல்லுகிற நாயக லக்ஷணங்கள் நாயகனுக்கும் உண்டாய் நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்றாற்போலே சொல்லுகிற நாயகி லக்ஷணங்கள், நாயகிக்கும் உண்டாய், இப்படி இரண்டு தலையும் குறைவற்று இவர்கள் தாங்கள் ப்ராய்தயௌவறருமாய்...

(சீலம் - உயர்ந்தோன் தாழ்ந்தோனிடம் வேறுபாடின்றிப் பழகுவது; வயஸ்ஸீ - அகவை; அபிஜநம் - குடிப்பிறப்பு; ஸம்பத்து-செல்வம்; ப்ராய்த யௌவறருமாய்-இளமைப் பருவம் எய்தியவராய்) என்பன ஈட்டில் வரும் தொடர்கள். (தி.வா.மொ. 5-3-0ஈ)

அரும்பதவுரைகாரர் ஸம்ஸ்கிருத லக்ஷணத்தையும் திராவிட லக்ஷணத்தையும் நம்பிள்ளையே முதற்கண் ஒரு சேர இலக்கணம் வகுத்துள்ளதாகக் கருதுகின்றனர்.

தலைவனுக்கும் தலைவிக்கும் பொதுமையான பண்புகளை வடமொழிக் காவியம் கூறுகிறது; அவர்களுக்குப் பிரித்துத் தனித்தனியாகவும் தமிழ்நூல்கள் வரையறுத்தன.

தமிழ் அகப்பொருள் தலைவன் தலைவியர்க்கு வான்மீகம் கூறும் அப்பொதுமைக் கூறுகளைச் சார்த்திக் கூறுவதால் நம்பிள்ளையின் ஒரு தனிக்கொள்கை தெரிகிறது. அஃது யாது?

திருவாய்மொழி அகப்பொருள் பாடல்களில் வரும் நாயகனும் நாயகியும் உலகியல் மாட்டு வரும் தலைமக்கள் போன்றவர் அல்லர்; அவர்கள் இறைவனும் இறைவியுமாவர்.

திருவாய்மொழி அகப்பொருள் பதிகங்களில் கிளவித்தலைவனும் பாட்டுடைத் தலைவனான திருமாலே; தலைவியோ பிராட்டி நிலை எய்திய நம்மாழ்வார். அந்நிலைமைக்கண் நம்மாழ்வாரைப் பராங்குசநாயகி என்று சுட்டிக்கூறுவது அருளிச்செயல் உரையாசிரியர்களின் சிறப்பாகும்.

## *பிராட்டி நிலை எய்தியது*

நம்மாழ்வார்க்குப் பிராட்டி நிலை விளைவதை நம்பிள்ளை விரிவாக மகாப்பிரவேசத்திலும் *அஞ்சிறைய மடநாராய் (1-4) என்று தொடங்கும் திருவாய்மொழிப் பதிகத்தின் பிரவேசத்திலும் நிறுவியிருக்கிறார்.

ஆழ்வாருக்குப் பிராட்டி நிலை வருவதற்கு ஆறு காரணங்களை உரையாசிரியர்கள் வகுத்துக் கூறுகின்றனர்.

*அவையாவன :-*

1. பிறர்க்கு உரிமையின்மை (அனன்யார்ஹ சேஷத்வம்)
2. பிறரைப் புகலாகக் கொள்ளாமை (அனன்ய சரணத்வம்)
3. கூடிய காலத்து ஆறியிருத்தல் (சம்லேஷத்தில் தரித்தல்)
4. பிரிவுக்காலத்து ஆற்றாயிருத்தல் (விச்லேஷத்தில் தரியாமை)

5. இறையோனாகிய தலைவனுக்கே நுகர்பொருளாயிருத்தல் (அனன்ய போக்யத்வம்)

6. அவனால் செயற்படுவதாயிருத்தல் (அனன்யார்ஹ சேஷத்வம்)

இந்த ஆறு காரணங்களும் முதிர்ந்து பண்பட்ட நிலையில் காதலுணர்ச்சி மீதூர்ந்து தலைவி நிலை எய்திப் பெண் கூற்றுக்களே நிகழும் என்பர் நம்பிள்ளை. இவ்வாறு கூறுகளையும் "ஸாம்ய ஷட்கம்" என்று தொகைப்படுத்தி மொழிகுவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் (ஆசாரிய இருதயம், 122).

ஈண்டு (ஸாம்யம்) ஒப்புமை என்னாமல் ஆறு வகையான ஒப்புமை என்று விதந்து (சிறப்புடன்) கூறியது.

1. நிரூபகத்வம் (இறைவனுக்கே சிறப்புடைய தருமமாக இருப்பது)
2. அநுரூபத்வம் (இறைவனுக்குத் தகுதியான வடிவுடையவனாயிருப்பது)
3. அபிமதத்வம் (இறைவனுக்கு விரும்பும் பொருளாயிருப்பது)
4. சேஷத்வஸம்பந்த துவாரா பாவம் (உயிர்கள் இறைவனுக்கு அடிமைப்படுவதற்கு வழியாயிருப்பது)
5. புருஷகாரத்வம் (இறைவனோடு உயிர்களைச் சேர்த்து வைக்கும் தன்மை)
6. ப்ராப்ய பூரகத்வம் (உயிர்கள் இயற்றும் தொண்டுகளை இறைவன் திருவுள்ளத்தில் நிரம்பச் செய்வது)

என்ற தன்மையியல்புகள் பிராட்டிக்கே உரியனவாதலின் என்க.

ஆழ்வார் பெண் தன்மையை உணர்ச்சி வடிவத்தில் எய்திப்பேசும் பேச்சுக்களை "மணிவல்லிப் பேச்சு" என்று குறியிட்டழைப்பர் நம்பிள்ளை ஆழ்வாரைத் "தலைவி" என்று கூறவேண்டிய இடங்களில் எல்லாம் நம்பிள்ளை "பிராட்டி" என்றே குறிப்பிடுவர்.

## கூற்றுக்கள் ஒப்புநோக்கு

ஆழ்வாராகிய பராங்குசநாயகியின் கூற்றுக்களை சீதாப்பிராட்டியின் கூற்றுக்களோடு ஒட்டிக் காண்கிறார் நம்பிள்ளை.

*எடுத்துக்காட்டு 1*

*றொளுமிறையோனும் (4-8) என்ற திருவாய்மொழியில் பராங்குசநாயகி தலைவனைப் பிரிந்த நிலையில் அரற்றிப் புலம்பிய நிலையிலும் அவன் தன்முன் தோன்றாத நிலையில் அவன் (தலைவன்) தன்னை வெறுத்தான் என்று நினைத்து, அவனால் வெறுக்கப்பட்ட தன்னுடைய உயிரிலும் உடைமைகளிலும் ஒரு பயனில்லை என்று வெறுத்துப் பேசுகிறாள்.

இராமபிரானைப் பிரிந்து அசோகவனத்தில் தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாளான சீதாப்பிராட்டிக்கும் அதே நிலை ஏற்பட்டது. அப்போது சீதாப்பிராட்டியின் பேச்சும் பராங்குசநாயகியின் பேச்சை மிகவும் ஒத்திருப்பதை நம்பிள்ளை எடுத்துக்காட்டுகிறார்.

*பராங்குசநாயகியின் கூற்று :-*

"உடம்பினால் குறைவில்லா உயிர் பிரிந்த மலைத்துண்டம்
கிடந்தனபோல் துணிபலவா அசுரர்குழாம் துணித்துகந்த
தடம்புனல சடைமுடியன் தனிபொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத உயிரினால் குறைவிலமே"

(தி.வா.மொ. 4.8.10)

உடல் வலிமையில் குறைவில்லாத அசுரர் கூட்டங்களை உயிர் நீங்கிய மலைத்துண்டங்கள் (இந்திரனுடைய வச்சிரப்படையால் தாக்கப்பட்ட காலத்து கீழே வீழ்ந்து கிடப்பன போன்று) கிடப்பனபோல வீழச்செய்து மகிழ்ந்தவனும்; மிகப்பெரிய கங்கையைத் தரித்த சடைமுடிச் சிவபிரான் விரும்பி வசிக்கின்ற திருமேனியை உடையவனும் ஆகிய என் தலைவனாகிய இறைவனால் விரும்பப்படாத என்னுடைய உயிரால் யாதொரு பயனையும் உடையோம் அல்லோம்).

"கிளர் ஒளியால் குறைவில்லா அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து
கிளர் ஒளிய இரணியனது அகல் மார்பம் கிழித்துகந்த
வளர் ஒளிய கனலாழி வலம்புரியன் மணிநீல
வளர் ஒளியான் கவராதவரி வளையால் குறைவிலமே"

(தி.வா.மொ. 4-8-7.)

(கிளந்த ஒளியால் குறைபாடில்லாத நரசிங்க உருவமாய்க் கிளர்ந்தெழுந்து கிளர்ந்த ஒளியையுடைய இரணியனது அகன்ற மார்பை கிழித்து மகிழ்ந்தவனும்; வளர்கின்ற ஒளியும் கனலும் பொருந்திய சக்கரப்படை மற்றும் வலம்புரிச் சங்கினையும் கொண்ட நீலமணி போன்ற ஒளியுடையவனுமாகிய இறைவனால் விரும்பப்படாத என் வரிவளைகளால் ஒரு பயனும் உடையோம் அல்லோம்).

*சீதாப்பிராட்டி கூற்று :-*

"மகாரதனான பெருமாளைப் பிரிந்து அரக்கர் நடுவில் வாழ்கின்ற எனக்கு இனி உயிரினால் ஒரு பயனுமில்லை; பொருள்களாலும் பயனில்லை; அணிகலன்களாலும் பயனில்லை;. - சுந். 26-5

இவ்விருவர் கூற்றுக்களிலும் ஆற்றாமையால் விளைந்த சோகமும் பேச்சுக்களில் ஒற்றுமை பொருந்தியிருப்பதையும் காணமுடிகிறது.

# பெரிய புராணமும் சீவக சிந்தாமணியும்

அறிஞர். தி.வே.கோபாலையர், புதுச்சேரி.

சேக்கிழார் புராணம் என்ற பெயரில் 104 விருத்தங்களால் ஆக்கப்பட்ட சிறியநூல் ஒன்று கொற்றவன்குடி உமாபதி சிவம் அருளியதாகக் கூறப்பட்டுத் தமிழகத்தில் நிலவி வருகிறது. சேக்கிழார் பெருமானின் பிறப்பு, சிறப்பு பெரியபுராணம் தோன்றிய வரலாறு, அதன்கண் குறிப்பிடப்படும் நாயன்மார்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், இடையர் முதலிய ஏனைய வருணத்தார், மரபுதெரியாதவர் இன்னார், தொகையடியார்கள், இன்னார், குருவருளால் வீடு பேறுற்றவர், சிவலிங்கவழிபாட்டால் வீடுபேறு உற்றவர் அடியர் வழிபாட்டால் வீடுபேறு உற்றவர், இன்ன இன்ன அடியார்கள், பெரிய புராணத்தின் பகுப்பாக அமைந்த காண்டங்கள், சருக்கங்கள், பாடல்களின் தொகை, பெரியபுராணம் அரங்கேற்றப்பட்ட சிறப்பு, சேக்கிழார் பெருமை போன்ற செய்திகள் அந்நூலில் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன.

அதன்கண், சமணர்கள் இயற்றிய சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் ஈடுபட்டுத் தமிழக நன்மக்கள் தம் வாழ்நாளை வீணாளாக்குவதனையும் சோழமன்னன் அந்நூலில் ஈடுபட்டுத்தன் இம்மை மறுமைப் பயன்களை இழப்பதனையும் நோக்கித் தமிழகமும் சோழமன்னனும் உய்வதற்காகச் சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது என்ற செய்தி சற்றுக் கடுமையாகக் கூறப்பட்டுள்ளது.

கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே கட்டிநடத்திய சிந்தாமணியை மெய்யென்று உலகிலுள்ளோர் சிலர் கற்று நெல் குத்துண்ணாது உமிக்குத்திக் கைவருந்தி, கறவைநிற்ப மலடு கறந்து உளம் தளர்ந்து, குளிர் பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் விழுந்து அளறு பாய்ந்து, விலைதருமென் கரும்பு இருக்க இரும்பை மென்றும் விளக்கு இருக்க மின்மினி தீக் காய்ந்தும் நொந்தார்.

வளவனும் குண்டு அமண் புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக்கதையை மெய்என்று வரிசை கூர உளம் மகிழ்ந்து பலபலபாராட்டிக்கேட்க உபயகுலமணி விளக்காம் சேக்கிழார் கண்டு இளவரசன் தனைநோக்கிச் சமணர் பொய்ந்நூல் இது மறுமைக்கு ஆகாது; இம்மைக்கும் அற்றே;

வளமருவுகின்ற சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி என வளவன் கேட்டு, அவகதையாய்ப் பயனற்ற கதை ஈதாகில் அம்மையும் இம்மையும் உறுதி பயக்கத்தக்க சிவகதை எது? அது கற்ற திறமைப் பேர் ஆர்? சீவகசிந்தாமணிபோல் இடையில் வந்த நவகதையோ? புராதனமோ? முன்னூல் உண்டோ? நானிலத்துச் சொன்னவர் ஆர்? கேட்டபேர் ஆர்? தவகதையோ? தவம்பண்ணிப் பேறுபெற்ற தனிக்கதையோ? அடைவுபடச் சாற்றும் என்றான்.

அதனைக் கேட்டுச் சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார்நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி என்பன பற்றிய செய்திகளை அரசனுக்கு எடுத்து கூறி அவற்றின் விரிவாகத் திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணத்தை அரசன் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இயற்றித்தந்தார் என்று சேக்கிழார்புராணம் குறிப்பிடுகிறது.

இப்பாடல்களில் கூறப்பட்ட செய்திகளை மனத்துக்கொள்ளும் முன்னர் நாம் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை நினைத்துப்பார்க்கவேண்டும்.

சமணசமயம் வேதகாலம் தொட்டே இப்பாரத தேயத்தில் நிலவி வரும் சமயமாகும். அச்சமயம் தொடர்பான நூற்றுக்கணக்கான நூல்கள் பாகதம், சமற்கிருதம், கன்னடம் என்ற மொழிகளில் உள்ளன. தமிழ் மொழியிலேயே சமண சாத்திரங்கள் குறைவான அளவில் இயற்றப்பட்டுள்ளன. ஆருகத மகாபுராணத்தின் உத்தரபுராணத்தில் சீவகன் சரிதை உள்ளது. அதனை ஒட்டி க்ஷத்ர சூடாமணியும் கத்ய சிந்தாமணியும் வடமொழியில் இயற்றப்பட்டன. அவற்றைத்தழுவியே சீவகசிந்தாமணி தமிழில் இயற்றப்பட்டது. மூல நூல்களை விடத் தமிழில் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணி பலவகையிலும் மேம்பட்டு விளங்குகிறது. அத்தகையதொரு நூலினைப் "புரட்டுத் திருட்டுச் சிந்தாமணி" என்று கூறுவதற்குத் தமிழ் மகனாகப் பிறந்த ஒருவன் உள்ளம் எவ்வாறு ஒப்பியதோ?

தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியருள் சேரர்களுள் வைணவச் சார்புடைய சான்றோர் இருந்திருக்கின்றனர். பாண்டியருள் சமணச்சார்பும் வைணவச்சார்பும் உடைய மன்னர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

ஆனால் சோழமன்னர் அனைவரும் சைவச் சார்புடையவர்களே, மறைந்த திருமுறைகளை வெளிக்கொணர்ந்து அவற்றைத் திருக்கோயில்களில் ஓதச்செய்த பெருமை முதல் இராசராசன் உள்ளிட்ட சோழமன்னர்களையே சாரும். ஆனால் சோழர்கள் பிறமதங்களை வெறுத்து ஒதுக்கும் இயல்பினர் அல்லர். நாயன்மாருள் ஒருவரான கோச்செங்கட்சோழர் திருநறையூர்த்திருமால் கோயிலை எடுப்பித்தார். முதல் இராசராசன் நாகப்பட்டினத்துப் புத்தர் கோயிலான சூடாமணிவர்ம விகாரத்துக்கு ஆனைமங்கலத்தைத் தானமாக வழங்கியவன்.

ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராசராசசோழன் என்ற முடிமன்னர் மூவர் ஆட்சிக்காலத்தும் அரசவைப் புலவராய் விளங்கிக் கவிராட்சதன் என்ற சிறப்புப் பெயருடன் கௌடகவியாக விளங்கி, அம்மன்னர் மூவர்பேரிலும் மூவருலாப் பாடிய பெருமைக்கு உரியவர். அவரிடம் இரண்டாம் குலோத்துங்கன் கல்விபயின்றவன் என்று தனிப்பாடல் ஒன்று தெரிவிக்கிறது.

ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்தபி ரான் என்று நித்தம்நவம்
பாடும் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன்என் றேஎனைச் சொல்லுவரே

என்பது அப்பாடல்.

சிறந்த சிவபக்தரான ஒட்டக்கூத்தரிடம் தமிழ்பயின்ற இரண்டாம் குலோத்துங்கன் சைவத் திருமுறைகளைப் பற்றியும் திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் திருவந்தாதியும் குறிப்பிட்ட நாயன்மார்களைப் பற்றியும் நன்கு அறிந்திருப்பான். அவன் சேக்கிழாரிடம் வினவியதாகக் குறிப்பிட்டுள்ள வினாக்கள் நகைப்பிற்குரியனவாக உள்ளன. எனவே, சிந்தாமணியில் ஈடுபட்ட மன்னர் மனத்தை மாற்றி நல்வழிப்படுத்தவே திருத்தொண்டர் புராணம் இயற்றப்பட்டது என்ற செய்தி கற்பனையாக எழுந்த செவிவழிச் செய்தியின் அடிப்படையில் கூறப்பட்டதே என்பது தேற்றம்.

ஆனால் சீவகசிந்தாமணியைப் பெரியபுராணத்தோடு தொடர்பு படுத்திக் கூறுவதற்கு உண்மைக் காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். அதனைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

பெரியபுராணம் தோன்றுவதன் முன்னர்த் தமிழகத்தில் சிந்தாமணி சூளாமணி என்ற சமணக்காப்பியங்கள் நிலவின. குண்டலகேசி என்ற பௌத்த காப்பியம் குற்றுயிரோடு நிலவியிருக்கலாம். வைணவம் பற்றிய பெருந்தேவனார் பாரதமும் பாரதவெண்பாவும் ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயணமும் தமிழ்நாட்டில் பயிலப்பட்டன. ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயணம் இருந்த செய்தி தொல்காப்பியப் பொருட்படல அகத்திணையியலின் 54 ஆம் நூற்பாவுரையில் நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டிய பாடல் ஒன்றனால் உணரப்படுகிறது. ஆனால் சைவ சமயத்தைப் பொறுத்த அளவில் எந்த ஒரு காப்பியமும் தோன்றியதாக அறிய முடியவில்லை. அக்குறையை நீக்கவே, சிறந்த சைவப் பற்றுடைய இரண்டாம் குலோத்துங்கன் வேண்டுகோட்படி சேக்கிழார் பெருமானால் பெரியபுராணம் இயற்றப்பட்டது என்று கருதுவதே ஏற்புடையது. தன்னுடைய ஆசிரியரும், சிறந்த சிவப்பற்றுடையவரும் ஆகிய ஒட்டக்கூத்தரை விடுத்து அரசன் சேக்கிழாரை வேண்டியது, ஒட்டக்கூத்தர் முறுகிய சிவப்பற்றினால் தம் காப்பியத்தில் ஏனைய சமயங்களை இழித்துரைத்துப்பாடி விடுவாரோ என்ற அச்சத்தினாலேயாம்.

பெரியபுராணம் தோன்றிய பின்னர் தமிழகத்தில் வாழ்ந்த பேருரையாசிரியர்கள் அடியார்க்குநல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் என்பவராவர். இவர்களுள் அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியரும் சிறந்த சிவபக்தர்கள். சிவபெருமானைக் குறிப்பதற்கே இறைவன் என்ற பெயரைத் தம் உரையில் பயன்படுத்துபவர்கள். இவருள் தூய மெய்ஞ்ஞான சிவச்சுடர் தாமே ஆகிய நச்சினார்க்கினியர் தம் பேரறிவுடைமை தோன்றச் சீவகசிந்தாமணிக்கு நயமான உரை அருளியுள்ளார். அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் பல இடங்களில் சிந்தாமணியை மேற்கோளாகக் காட்டியுள்ளார். நீள்நிலம் கடந்தோன் தாள் தொழுமரபில் தோன்றிய பரிமேலழகர் தம் உரையுள் பல சிந்தாமணிப் பாடல்களை மேற்கோளாக வழங்கியுள்ளார். சிந்தாமணியைத் தம் இலக்கணக் கொத்துரையில் இழித்துரைத்த சாமிநாததேசிகரும் சிந்தாமணி மேற்கோள் காட்டுவதனைக் கைவிடவில்லை. மாதவச்சிவஞான யோகிகள் தம் சூத்திரவிருத்தியுள் சிந்தாமணி மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். இவர்கள் பெரியபுராண மேற்கோள்களை எடுத்தாளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் சீவகசிந்தாமணி சேக்கிழார் பெருமானுக்கு முன்னும் பின்னும் தமிழ்ச் சான்றோரால் போற்றப்பட்டு வந்துள்ளமை தேற்றம்.

விருத்தயாப்பில் பெரியபுராணம் இயற்ற முற்பட்ட சேக்கிழார் தாம் இயற்றும் நூலுக்கு முன்மாதிரியாகச் சீவகசிந்தாமணியையே எடுத்துக் கொண்டார் என்றே கருதுகிறோம். விருத்தயாப்பில் வீறுபெற எழுந்த சிந்தாமணி வீடுபேறு அடைதற்குரியதோர் ஆன்மாவின் இறுதிப்பிறப்பில் அது மனிதனாகத் தோன்றி இல்லறம் நிகழ்த்திப் பின் துறவுபூண்டு தவம் செய்து பிறவிப் பிணியை ஒழித்து வீடுபேறுற்ற செய்தியை விரித்துரைப்பதாகும். எண்வகைமணங்களை எடுத்து உரைத்தாலும் ஆங்காங்கு இன்ப நிலையாமையையும் இறைவழிபாட்டின் ஏற்றத்தையும் எடுத்துக்கூறிச் சீவகன் உலக இன்பத்தைப் பற்றறத் துறந்து தவம் செய்து வீடுபெற்ற நிலையை விரித்துரைத்து யாக்கை நிலையாமை, இன்பம் நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என்ற பலவகைப்பட்ட நிலையாமைகளையும் நூல் முழுதும் எடுத்தியம்புவது.

வீடுபேறு உறுதற்குரிய ஆன்மாக்களின் இறுதி மனிதப்பிறப்பை எடுத்துரைக்கும் பெரிய புராணம் இத்தகைய நூலினை முன்மாதிரியாகக் கொள்வது ஏற்புடையதே. காப்பிய இலக்கணம் இவ்வாறு இருத்தல் வேண்டும் என்று எடுத்துரைத்த தமிழ்த்தண்டியலங்காரம் சேக்கிழார் பெருமான் காலத்தில் தோன்றவில்லை. எனவே, தம் காப்பியத்துக்கு முன் மாதிரியாகத் தமிழ்ச்சான்றோர் பலரும் போற்றிப்புகழும் சிந்தாமணியைச் சேக்கிழார்பெருமான் முன்மாதிரியாக எடுத்துக்கொண்டிருக்கலாம். சிந்தாமணி நிலையாமையை விரித்துரைக்க எழுந்தது. பெரியபுராணம் பக்திச் சுவையைப் பரப்புவதற்கு எழுந்தது. சிந்தாமணி, காப்பியநாயகன் ஒருவனுடைய வரலாறு பற்றியது. பெரியபுராணம், நாயன்மார் பலருடைய வரலாறு பற்றியது. எனவே, தம் நூலின் இயல்புக்கு ஏற்பவே, சேக்கிழார் பெருமான் சிந்தாமணியைப் பயன்படுத்துதல் கூடும்.

இரு காப்பியங்களுக்கும் இடையே உள்ள இயைபுகளை நோக்குவோம். தமிழில் எழுந்த காப்பியங்களில் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், காப்பியச் செய்திகளைச் சுருக்கி குறிப்பிடும் பதிகம் என்பன சிந்தாமணியிலேயே முதன்முதல் காணப்படுகின்றன.

சிந்தாமணியின் முதற்பாடலாகிய கடவுள் வாழ்த்து வண்ணத்தால் வருவது. நேரசையில் தொடங்கும் அப்பாடலின் ஒவ்வோரடியிலும் 14 எழுத்துக்கள் வந்துள்ளன. ஒவ்வோரடியும் ஐந்து ஐந்து சீர்களை உடையது.

மூவா முதலா உலகம்மொரு மூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்தும் அன்றே.

ஐஞ்சீரடிகளாலாகிய இப்பாடலின் அடி ஒவ்வொன்றிலும் 14 எழுத்துக்கள் உள்ளன.

இவ்வாறே சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் இயற்றிய கடவுள் வாழ்த்துப் பாடலும் வண்ணத்தால் வருவதாகும். நாற்சீரடி நான்கினால் அமைந்த இப்பாடலின் ஒவ்வோரடியிலும் பன்னிரண்டு எழுத்துக்கள் வருவதனைக் காணலாம்.

உலகெ லாமுணர்ந் தோதற்க ரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்.

இதன்கண் அடிதோறும் 12 எழுத்துக்களே வந்துள்ளமை காணலாம்.

இவ்வாறே பின்னர்த் தோன்றிய கந்தபுராணத்தின் முதற்பாடலாகிய

"திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்"

என்று தொடங்கும் பாடலும் அமைந்துள்ளமை குறித்து உணரத்தகும்.

அவையடக்கியலே அரில்தபத்தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே. தொ.பொ.425

என்று தொல்காப்பியத்தில் கூறப்பெறினும் அதனைச் செயலளவில் கொணர்ந்த முதல் இலக்கணநூல் யாப்பருங்கலக்காரிகை என்பதனையும், முதல் காப்பியம் சீவகசிந்தாமணி என்பதனையும் அறிஞர் எல்லோரும் அறிவர்.

சிந்தாமணியைப் பின்பற்றிப் பெரியபுராணமும் தொடக்கத்தில் அவையடக்கம் கூறுகிறது.

இந்நீர என்சொல் பழுதாயினும் கொள்ப அன்றே
பொய்ந்நீர அல்லாப் பொருளால்வின் புகுதும் என்பார்-

என்பது சிந்தாமணி

"செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்குஎன் உரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்"

என்பது பெரியபுராணம்.

3. அடுத்துச் சிந்தாமணி, பதிகத்தில் நூற்செய்தியைத் தொகுத்துக் கூறுகிறது. பெரியபுராணம் திருத்தொண்டத் தொகையினையே பதிகமாகக் கொண்டுள்ளது. திருத்தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாடலின் தொடக்கமும் ஒவ்வொரு சருக்கத்தின் பெயராக அமைக்கப்பட்டுள்ளது. திருத்தொண்டத் தொகையில் பதினொரு பாடல்களே உள்ளமையால் பதினொரு தொடர்களே சருக்கங்களின் பெயராக அமைய, அவற்றுடன் திருமலைச்சருக்கம், வெள்ளானைச்சருக்கம் என்ற இரு சருக்கங்களை இணைத்துச் சிந்தாமணியில் பதின்மூன்று இலம்பகங்கள் இருப்பன போலவே பெரியபுராணமும் பதின்மூன்று சருக்கங்களாக அமைக்கப்பட்டுள்ளது. முத்தியிலம்பகம் சீவகன் வீடுபேறுற்ற செய்தியை விளக்கிக்கூறுவது போல வெள்ளானைச் சருக்கமும் சுந்தரர் கயிலையில் சிவபெருமானை அடைந்த சிறப்பினை எடுத்து இயம்புகிறது.

4. சிந்தாமணியில் புறநானூறு, கலித்தொகை, அகநானூறு, பத்துப்பாட்டு என்ற சங்கப்பாடல்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் நிரம்பக் காணப்படுகின்றன. சேக்கிழார் பெருமான் சங்கப்பாடல்களில் தோய்ந்தவர் என்று காண்பதற்கு அகச்சான்றுகள் இல்லை. ஆதலின் சங்கப்பாடல்களில் காணப்படினும் அக்கருத்தினை அவர் சிந்தாமணி வாயிலாகவே பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறோம். பட்டினப்பாலையில் மலைத்தலைஇய கடற்காவிரி, காவிரிப்புனல்பரந்து பொன் கொழிக்கும் சோணாடு, சோணாட்டின் முட்டாச் சிறப்பின் பட்டினம், திருமாவளவன் கோல் என மலை, ஆறு, நாடு, தலைநகர் மன்னன் சிறப்பு என்பன நிரலே கூறப்பட்டிருப்பதனை உட்கொண்டு சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் நாமகள் இலம்பகம் என்ற தம் நூல் முதல் இலம்பகத்தில் இவற்றை முதலில் வருணித்துக் கதையைத் தொடங்குகிறார். அவ்வாறே சேக்கிழார் பெருமானும் தம் திருமலைச் சருக்கத்தின் தொடக்கத்தில் கயிலைமலை, காவிரி ஆறு சோழநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, மன்னன் செங்கோல்

என்பனவற்றை முதலில் கூறிச் சுந்தரர் பிறப்பு முதலியவற்றைத் தொடர்கின்றார். நாட்டுச்சருக்கம், நகரச்சருக்கம் முதலாகத் தனிச்சருக்கங்களை அமைக்கவில்லை.

5. சீவகசிந்தாமணியில் சீவகன் சரிதம் முதலில் இருந்து நிறைவு வரை தொடர்ந்து வருவது போலவே, பெரியபுராணத்திலும் காப்பியத்தலைவன் சரிதம் தொடர்ந்து வரல் வேண்டும் என்ற கருத்தினால் தொடக்கத்தில் சுந்தரருடைய வரலாற்றைத் தொடங்கித் தடுத்தாட் கொண்ட புராணத்தில் அவர் இறைவனால் தடுத்தாளப்பட்டுத் திருத்தொண்டத் தொகை பாடிய அளவும் அவர் வரலாற்றைக் கூறி அவ்வரலாற்றை இடைப்பட்ட ஏயர் கோன்கலிக்காமநாயனார் புராணம், சேரமான் பெருமாள் நாயனார் புராணம் என்பனவற்றில் தொடர்ந்து நூலின் நிறைவான வெள்ளானைச் சருக்கத்தில் நிறைவு செய்கிறார்.

6. சிந்தாமணியில் பஞ்சநமஸ்கார மந்திரத்தின் சிறப்பு

நற்செய்கை செய்திலாதோர் நாள்உலக் கின்ற போழ்தின்
முற்செய்த வினையின் நீங்கி நல்வினை விளைக்கும் வித்து
.................. மந்திரம் ஐந்தும் - சிந்தா - 950

என்று ஒரு சில இடங்களில் காணப்படுவது போலத் திருவைந்தெழுத்தின் சிறப்பு பெரியபுராணத்தில் நேரிடையாகவும், உவமவாயிலாகவும் பல இடங்களில் கூறப்படுகிறது.

7. கட்டியங்காரனுக்கு அழிவுநாள் நெருங்கிய அளவில் அவன் போகமகளிர் தீய நிமித்தங்களையும் தீயகனவுகளையும் கண்டனர் என்று சிந்தாமணி

"போகமகளிர் வலக்கண்கள் துடித்த; பொல்லாக் கனாக்கண்டார்;
ஆகம் மன்னற்கு ஒளி மழுங்கிற்று; அஞ்சத்தக்க குரலினால்
கூகை கோயில் பகல் குழற, கொற்ற முரசம் பாடுஅவிந்து
மாகம் நெய்த்தோர் சொரிந்து எங்கும் மண்ணும் விண்ணும் அதிர்ந்தவே"
- 2173

என்று இயம்புவது போலவே மதுரைச் சமணர்கள் தம் அழிவு குறித்துத் தீய கனவுகளும் தீய நிமித்தங்களும் கண்ட செய்தியைச் சேக்கிழார் பெருமான் விரித்துரைக்கிறார்.

8. சிந்தாமணியில் சச்சந்தன் கட்டியங்காரன் போர், சீவகன் வேடர்களை விரட்டிய பூசல், காந்தருவதத்தையைச் சீவகன் வீணையில் வென்ற செய்கையைப் பொறாது பூசலிட்ட மன்னர்களைச் சீவகன் பொருது வென்று அடக்கியது என்ற சிறு பூசல்களும், சீவகன் கட்டியங்காரனுடன் பொருத பெரும்போரும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. இவை இயற்பகைநாயனார், ஏனாதிநாதர், கண்ணப்பர், கோட்புலி, புகழ்ச்சோழர் என்ற நாயன்மார் புராணங்களை இயற்றும்போது பூசல்களையும், போரையும் வருணிக்கச் சேக்கிழாருக்கு உதவியுள்ளன.

வீரர்கள் போரிடும் போது அவர்களுடைய மறத்துறையிலும் அறமே பயின்றிருந்தது என்ற செய்தி விபுலன் கட்டியங்காரனுடைய வீரரோடு போரிட்ட போது,

வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்;
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில் என்று எறியான்;
மாறன்மையின் மறம் வாடும் என்று இளையாரையும் எறியான்;
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில்உழவன்

- சிந் 2270

மேலே இவர்ந்துவரும் வீரரின்றித் தனித்துவந்த யானைகளையும், பிறரால் புண்படுத்தப்பட்ட வீரரையும் மிக இளையரையும், மிகவும் ஆண்டு மூத்தவரையும் எதிர்த்துப் போரிடுதல் உண்மை வீரனுக்கு ஏலாது என்று அவர்களைத் தாக்காது விடுத்தான் என்று கூறும் பாடலில் காணப்படுகிறது.

இவ்வாறே திண்ணனாருடன் வேட்டைக்குச் சென்ற வீரர்கள் வேட்டையாடும் போது சிலநெறிமுறைகளைப் பின்பற்றியே வேட்டையாடினர் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுகுருளைகள் மிசைபடுகொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அணையார்
கொடியனஎதிர் முடுகியும்உறு கொலைபுரிசிலை மறவர் -

கண்ணப்ப - 86

யானைக்குட்டிகளையும், கண்கள் கூடத் திறவாத விலங்குகளின் ஈன்றணிமையுடைய குருளைகளையும், கருவுற்று வயிறு வீங்கி அடிதளர்ந்து

நடக்கும் பெண் விலங்குகளையும் வேடர் துன்புறுத்தவில்லை என்று குறிப்பிடும் திறமும் நோக்கத்தக்கது.

9. சங்க இலக்கியத்தில் பெருவனப்பினளான தலைவி ஒருத்தியைத் தலைவன் கண்டு இவள் வான் அரமகளோ? வரை அரமகளோ? என்று ஐயுற்றதாகக் குறிப்பிடும் பாடல்கள் இருக்கலாம். இவ்வாறு தலைவன் ஒருவனைக் கண்டு தலைவி ஐயுற்றதாகப் பாடல் இல்லை. தலைவி ஐயுற்றதாகப் பாடல் அமையக்கூடாது என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் அகஇலக்கியக் கோட்பாடாகும்.

சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான      தொ.பொ.94

சிறந்த தலைவன்கண்ணே ஐயம் நிகழ்தல் சிறந்தது. அத் தலைவனின் இழிந்த தலைவிக்கண் ஐயம்நிகழுமாயின் இன்பத்திற்கு இழிவே அவள்கருதும் ஆகலான் என்பது இந்நூற்பாவின் பொருள்.

தலைவற்குத் தெய்வமோ அல்லளோ என நிகழ்ந்த ஐயம், நூல் முதலியவற்றான், நீக்கித் தெய்வமன்மை உணர்தற்கு அறிவுடையனாதலானும், தலைவிக்கு முருகனோ இயக்கனோ மகனோ என ஐயம்நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலள் ஆகலானும் இங்ஙனம் கூறினார்.

'உயர்மொழிக்கு உரிய உறழும் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே'      தொ.பொ.238

ஐயக்கிளவி தலைவற்கே உரித்து. இனி ஐயப்பாடு தலைவிக்கும் உரித்து என்றால் சிறந்துழி ஐயம் (94) என்பதற்கு மாறாம்.

'அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனன்'      - அக. நா - 48

என்பதனை ஐயத்துக்கண் தெய்வம் என்று துணிந்தாள் எனின் அதனைப் பேராசிரியர் தாமே மறுத்தவாறு காண்க என்பது நச்சினார்க்கினியர் உரை.

*சீவக சிந்தாமணியில்*

எண்ணின் மற்று யாவனாங்கொல் என்இதற்படுத்த ஏந்தல் -718

யாவனே யானுமாக -719

மின்னின் நீள்கடம்பின் நெடு வேள்கொலோ?

மன்னும் ஐங்கணை வார்சிலை மைந்தனோ?

என்னனோ? அறியேம் உரையீர் எனாப்

பொன்னங் கொம்பனையார் புலம்பு எய்தினார் -1956

மண்பால் இழிந்த மலர் ஐங்கணை மைந்தன் என்றாள் - 1969

வணங்கு நோன்சிலை வார்கணைக் காமனோ?

மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனோ?

நிணந்து என் நெஞ்சம் நிறைகொண்ட கள்வனை

அணங்குகாள்! அறியேன் உரையீர்களோ? -சிந்-1318

என மகளிர் ஐயுற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

நச்சினார்க்கினியர் ஈண்டுக்களவு அன்மையானும் தன் ஞானத்தால் ஐயம் தீர்த்தல் கூடுமாகலானும் தலைமகட்கு ஐயம் நிகழ்ந்தது என்று விளக்கம் அளித்துள்ளார்.

சிந்தாமணியை அடியொற்றியே சேக்கிழார் பெருமான்

முன்னேவந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகு ஒளியால்

தன்நேர் இல் மாறனோ? தார்மார்பின் விஞ்சையனோ?

மின்நேர் செஞ்சடை அண்ணல் மெய் அருள் பெற்றுடையவனோ?

என்னே என்மனம் திரித்த இவன் யாரோ? என நினைத்தார்.

- தடுத்தாட் 144

எனச் சுந்தரரை முதலில் கண்ட பரவை நாச்சியார் ஐயுற்றதாகப் பாடியுள்ளார்.

10. இலக்கணையார் இலம்பகத்தில் சீவகன் இலக்கணையை மணம் செய்து கொண்டபோது நிகழ்த்திய வைதிகச் சடங்குகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அந்த வாய்ப்பினைத் திருஞானசம்பந்தர் திருமணத்தில் பின்பற்றிச் சேக்கிழார் பெருமான் வைதிகமுறைத் திருமணச் சடங்குகளை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

11. கீழ்மகன் ஆட்சியாளனாக அமையும் போது அவனிடத்தில் கையூட்டு வழங்கி எந்தச் செயலையும் நிகழ்த்தி விடலாம் என்ற செய்தி சிந்தாமணியில் கந்துக்கடன் கூற்றாகவும் (1124) .சுரமஞ்சரி தந்தை கூற்றாகவும் (910, 912) கூறப்பட்டுள்ளது.

இதனை உளங்கொண்ட சேக்கிழார்பெருமான் தருமசேனரை அழைத்து வரும்படி தன் ஏவலருக்கு ஆணையிட்ட மன்னன் அவர்களை நோக்கி,

'இவர் சொன்ன தீயோனைச் செறுவதற்குப் பொருள் கொண்டுவிடாது என்பால் கொடுவாரும்' என்று குறிப்பிட்டதாகத் தெரிவிக்கிறார். கையூட்டுப் பெறுதல் பண்பாக நிலவும் இப்பாரதத்தில் அன்று கீழ்மக்கள் சிலர் கையூட்டுப் பெறும் பழக்கம் ஓரோவழி இருந்தது என்பது சிந்தாமணியாலும் பெரியபுராணத்தாலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக அருமையாக அமைந்துள்ளதொரு செய்தியை நோக்குவோம்.

12. ஏனாதிநாதர் தம்மைப் பகைவனாகக் கருதிய அதிசூரன் குறிப்பிட்டவாறே அவனோடு தனித்து நேருக்கு நேர் போரிடக் கருதித் தனியிடம்புக்கு அவனோடு வாட்போர் நிகழ்த்தியபோது, அவன் வஞ்சனையாக அன்று அணிந்து வந்த நெற்றித்திருநீறு ஏனாதிநாதருக்குப் புலப்பட, அதிசூரனைச் சிவனடியாராகக் கருதி அவன் தம்மைக் கொல்வதற்கு ஒருப்பட்டுப் போரிடுதலை நிறுத்தி வாளா இருந்தார். தம் இறுதி அணித்து என்று அறிந்து கைவாளையும், கேடயத்தையும் நீக்கிவிட வேண்டும் என்று கருதியும் சிவனடியார் நிராயுதர் ஒருவரைக் கொன்றார் என்ற பழி அதிசூரனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகக் கைகளில் வாளையும், கேடயத்தையும் ஏந்தியவாறே இருந்து அதிசூரனால் உயிர் போக்கப்பெற்றார்.

கைவாளுடன் பலகை நீக்கக் கருதி அது
செய்யார் நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்கு என்று இரும்பலகை
நெய்வாளுடன் அடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார்

-ஏனாதி 39

ஏனாதிநாதர் கைவாளுடன் பலகை நீக்கக் கருதியது ஏன்? என்பதனைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடவில்லை. அதன் காரணத்தை நாம் சிந்தாமணியிலிருந்தே அறிய வேண்டியவராய் உள்ளோம்.

விசயமாதேவி கருவுற்ற அன்றே கண்ட தீக்கனவினை உணர்ந்த சச்சந்தன் தன் இறுதி விரைவில் நிகழப்போவதை உறுதியாக அறிந்து தன் சரீரத்தை நிழலிலிட்டு ஆன்மாவை வெயிலில் இட்டு வாழத் தொடங்கினான். விசயையின் இணைவிழைச்சில் பொழுது போக்காது அவளுக்குச் சமண சமய சாத்திரங்களையும் அரசியல் செய்திகளையும் போதிப்பதில் பொழுதினைக் கழித்தான். தனது இறுதி அணித்து என்று உறுதியாக உணர்ந்தபோதிலும் அது கட்டியங்காரனால் நிகழும் என்று அரசன் கருதவில்லை. கட்டியங்காரன் தன் அரண்மனையை முற்றுகையிட்ட அளவில் அரசன் விசயைக்குக் கூறிய அறிவுரைகள் அவன் பற்றற்ற உள்ளத்தின் தூய்மையை எடுத்து இயம்புவன. விசயையை மயிற் பொறியில் போக்கித் தான் ஒருவனேயாகக் கட்டியங்காரனுடனும் அவன் வீரர்களுடனும் போரிட்டு இனிப் போராட முடியாது என்ற அளவிற்கு வலிமை குறைந்தான். உடனே தன் கை வாளினையும் கேடயத்தையும் நழுவவிட்டு, 'தீதும் நன்றும் பிறர்தரவாரா' ஆதலின் கட்டியங்காரனைக் கருவியாகக் கொண்டு ஊழ் தன் இறுதியை விளைவித்தது என்ற எண்ணம் மேலிடக் கட்டியங்காரனிடம் கொண்டிருந்த பகைமை உள்ளத்தை மாற்றி உள்ளத்தைத் தூயதாக்கி, அருகப் பெருமான் திருவடிகளைத் தியானித்து மந்திரச் சொற்களை உச்சரித்துச் சச்சந்தன் தேவர்களுக்கு விருந்ினன் ஆனான்.

பாலருவித்திங்கள் தோய் முத்தமாலைப் பழிப்பில்
நெடுங்குடைக்கீழ்ப் பாய்பரிமான் தேர்க்
கோலருவி வெஞ்சிலையான் கூர்வாளோடுமணிக்
கேடகமும் மறமும் மாற்றி,
வாலருவி வாமன் அடித்தாமரை மலர்சூடி மந்திரமென்
சாந்து பூசி,
வேலருவிக் கண்ணினார் மெய்காப்பு ஒம்ப வேந்தன்போய்
விண்ணோர் விருந்து ஆயினானே
- சிந்தா 291

கட்டியங்காரனிடம் கொண்ட பகைமையை மனத்திலிருந்து நீக்கிச் சச்சந்தன் மனத்தூய்மை பெற்றுத் தூயமனத்தால் அருகனைத் தியானித்தான். அருகனுடைய மந்திரத்தை உச்சரித்து மொழித்தூய்மை பெற்றான். கைவாளினையும், கேடயத்தையும் நீக்கி உடல் தூய்மை பெற்றான். மனம், மொழி, மெய் மூன்றும் தூயனாய் அமரனானான்.

உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றும் உள்ளிக்கெடுத்து
இறை உள்ளில் ஒடுங்கே -திருவாய் 19
ஒடுங்க அவன்கண் ஒடுங்கலும் எல்லாம் விடும் பினும்
யாக்கை விடும் பொழுது எண்ணே - திருவாய் 20

உடம்பினின்றும் உயிர் நீங்கும் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லாச் சமயத்தாருக்கும் உடன்பாடாதலின், வீடு எய்துவார்க்குப் பிறப்பிற்கு ஏதுவாகிய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டும். (குறள் 358 - பரிமேலழகர் உரை)

உயிர் நீங்குங் காலத்து உடல் தூய்மைக்கு இன்றியமையாததாகிய வாளையும் கேடயத்தையும் நீக்குதல் வேண்டும் என்பது விதியெனினும் அடியவரைப் பழியினின்றும் காப்பதற்காக ஏனாதிநாதனார் அதனையும் செய்யவில்லை என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் நுட்பம் சிந்தாமணியால் விளக்கம் பெறுகிறது.

இதுகாறும் கூறியவாற்றால் சேக்கிழார்பெருமானுடைய பெரியபுராணம் இறவாப்புகழ் பெறப் பல்லாற்றாலும் உதவிய சீவக சிந்தாமணிக் காப்பியத்தைப் புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக் கதை என்று குறிப்பிடும் தொடர் ஏற்புடைத்து அன்று என்பது தெளிவாகும்.

'வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்;
தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்
ஒரும் வையத்து இயற்கை அன்றோ' - சிந்தாமணி

**தி.வே.கோபாலையர்**
புதுச்சேரி

# கேரளத்தில் கண்ணகி வழிபாடும் சிலப்பதிகாரமும் கருத்தரங்கு தமிழ்த்துறை,

## கேரளப்பல்கலைக்கழகம், காரியவட்டம்

2005, மார்ச் 17, 18, 19 கருத்தரங்கு நிகழ்ச்சிகள் பற்றி செய்தி அறிக்கை

பேராசிரியர் முனைவர். கி. நாச்சிமுத்து

சிலப்பதிகாரம் கொண்டாடும் கண்ணகி வழிபாடு கேரளத்தில் இன்றும் வாழும் வழிபாடாக விளங்கி வருகிறது. பல நாட்டுக் கதைப்பாடல்களும் மரபுகளும் வழங்கி வருகின்றன. கொடுங்கல்லூர் மங்கல தேவி கோயில், ஆற்றுகால் பகவதி கோயில் இன்னும் பாலக்காடு பகுதியில் காணப்படும் கோயில்கள் போக மலைப்பகுதிகளில் பழங்குடிகளிடமும் அது தொடர்பான வழிபாடுகளும் நாட்டுக் கதைப்பாடல்களும் காணப்படுகின்ற செய்தி புதியதாகத் தமிழ்த்துறை ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் கேரளப் பல்கலைக் கழகம் சிலம்பின் மொழி மற்றும் சிலம்பு பற்றிய ஆய்வுகள் பற்றி ஆய்ந்து நூல்களை வெளியிட்டுள்ளது. கேரளப் பல்கலைக்கழகத்தில் இளங்கோ அடிகள் பெயரில் ஒரு ஆய்விருக்கை நிறுவவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதை வலியுறுத்தவும் கேரளத்தில் காணப்படும் **கண்ணகி வழிபாடு சிலப்பதிகாரம்** பற்றிய செய்திகளைப் பதிவு செய்யவும் ஆராய்ச்சி செய்யவும் வெளிப்படுத்தவும் மேல் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டவும் வாய்ப்பாகக் கேரளத்தில் கண்ணகி வழிபாடும் சிலப்பதிகாரமும் என்ற தலைப்பில் மார்ச்சு மாதம் 17, 18, 19 தேதிகளில் ஒரு தேசிய அளவிலான கருத்தரங்கு கேரளப் பல்கலைக்கழகம் தஞ்சை தென்னிந்தியப் பண்பாட்டு மையம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் நடந்தது. மதுரைத் தமிழ்ச்சமணர்கள் சங்கத்தலைவர் திரு.எஸ்.அனந்தராசன் தினமலர் ஆசிரியர், இரா. கிருஷ்ணமூர்த்தி, அமெரிக்காவிலுள்ள அழகப்பர் இராம்மோகன் ஆகியோரும் நிதி உதவி அளிக்கின்றனர். திரு.வி.டி. இந்துசூடன், கணநாத் ஒபயசேகரா போன்றோர் ஆய்வுகளுக்குப் பிறகு மிகப்பெரிய ஆய்வு முயற்சியாக இக்கருத்தரங்கு அமைந்தது எனலாம்.

கேரளத்தில் கண்ணகி வழிபாடு பற்றிய இலக்கிய நாட்டுப்புறவியல் செய்திகள் வழிபாட்டு முறைகள், சின்னங்கள் பற்றிப் பதிவு செய்தல் ஆய்தல், சிலம்பு கூறும் செய்திகள் கேரளத்தின் கலை பண்பாட்டில் இன்றும் எஞ்சி நிற்பனவற்றை இனங்காணுதல் அத்துடன் தமிழகத்திலும்

இலங்கையிலும் இவ்வழிபாடு பற்றிய செய்திகளைத் தொகுத்துப் பார்த்தல், சிலப்பதிகாரத்தின் பதிப்பு, மொழி, இலக்கியப்பாங்கு, சிலம்பு காட்டும் சமயம் பண்பாடு வாழ்க்கைச் செய்திகள் என்பனவற்றை ஆய்தல் போன்ற நோக்கில் இத்துறையில் புலமை பெற்ற 31 ஆய்வாளர்கள் இக்கருத்தரங்கில் பங்கெடுத்தார்கள். அத்துடன் சிலப்பதிகாரத்தை இசை நாடக வடிவில் நடனக்குழுவினரும் இசைக்குழுவினரும் நடத்திக்காட்டி மகிழ்வித்தனர். மொத்தத்தில் இருநூறுக்கும் மேற்பட்டோர் இதில் பங்கெடுத்தனர்.

மூன்று நாள் நடைபெற்ற இக்கருத்தரங்கை **திருவிதாங்கூர் மாமன்னர் பத்மநாப தாசர் மாட்சிமை தாங்கிய உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா அவர்கள்** மார்ச்சு 17ஆம் தேதி காலை காரியவட்டம் கேரளப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறையில் நடந்த மேள தாளம் தாலப்பொலி வரவேற்பிற்குப் பின் தொடங்கிவைத்தார்கள். கேரளப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் எம்.கே.இராமச்சந்திரன் நாயர் தலைமை தாங்கினார்கள். திராவிட மொழியியல் பள்ளி சிறப்புப் பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பை வெளியிட முன்னாள் கேரளப்பல்கலைக்கழக இணைத்துணைவேந்தரும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் எம். சாலிகு அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டார்கள். முன்னாள் கேரள வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் திராவிட மொழியியல் பள்ளி முதுநிலை ஆய்வாளருமான திரு.டி.மாதவமேனோன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். கேரள வரலாற்றுக்கழக இயக்குநர் டாக்டர் பி.ஜே.செரியான், திருவனந்தபுரம் அரசு கல்வியியல் கல்லூரி முதல்வர் டாக்டர். கே. ஜேக்கப் மாத்யூ, கேரளப்பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் முகம்மது குஞ்சு மேத்தரு. மதுரைத் தமிழ்ச்சமணர்கள் சங்கத்தலைவர் திரு. எஸ். அனந்தராசன், பூம்புகார் பத்தினிக் கோட்ட அறநிலை திரு. ஆர். இராஜசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். கி.நாச்சிமுத்து வரவேற்புரை ஆற்ற, தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர்.சி.சுப்பிரமணிய பிள்ளை நன்றியுரை நவின்றார்.

17ஆம் தேதி காலை நிகழ்ந்த **தொல்லியல் வரலாற்று நோக்கில் கண்ணகி வழிபாடு** என்ற முதல் அமர்வில் மலையாளப் பேராசிரியர் வி.எஸ்.சர்மா தலைமை ஏற்று கேரளத்தில் கண்ணகி வழிபாடு நடக்கும்

கோயில்கள் பற்றிக் கட்டுரை படித்தார். தமிழ்ப்பல்கலைக்கழகக் கட்டடக்கலைப் பேராசிரியர் கோ.தெய்வநாயகம் தம் தந்தையார் பேராசிரியர் சீனி கோவிந்தராசனாருடன் தான் சென்று கண்ட குமுளிக்குப் பக்கத்தில் உள்ள மங்கலதேவிக் கோயிலே சேரன் செங்குட்டுவன் முதன்முதல் கண்ணகிக்கு எடுத்த கோயில் என்பதைப் படவிளக்கங்களுடன் எடுத்துரைத்தார்.

**இன்றைய கண்ணகி வழிபாட்டு மரபுகள்** என்ற இரண்டாவது அமர்வில் பேராசிரியர் கோ.தெய்வநாயகம் அவர்கள் தலைமையில் கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர்.பி. நசீம்தீன் நாட்டுப்புற பழங்குடி மக்கள் மரபில் கண்ணகி கதைகளும் வழிபாடும் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார். சிலப்பதிகாரம் நாட்டுப்புறச் சமயத்தையே முன்னிறுத்துகிறது என்பதைப் பல எடுத்துக்காட்டுகளால் நிறுவினார். கேரள மலைப்பகுதிகளில் மறையூருக்கு அடுத்துள்ள பெருமலை என்ற இடத்தில் மன்னான் பழங்குடியினரிடம் தான் கண்ட புதிய கண்ணகி வழிபாடுகள் பற்றிய செய்திகளைப் படவிளக்கங்களுடன் திரு.ஏ.பால்சேகர் எடுத்துரைத்தர். புலவர் செ.இராசு அவர்கள் தமிழகத்தில் கண்ணகி வழிபாடு பற்றியும் டாக்டர். கோ.வெ.கீதா அவர்கள் பாலக்காடு பகுதியில் கண்ணகி கதைப்பாடல்கள் வழிபாடுகள் பற்றியும் கட்டுரைகள் படித்தார்கள். புலவர் இராசு அவர்கள் மங்கல தேவிக் கோயிலில் காணப்படும் இராசராச சோழன் காலக்கல்வெட்டுக்கள் பற்றி எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மதுரை நா.மம்மது அவர்கள் ***சிலப்பதிகாரத்தில் இசை*** என்ற தலைப்பில் ஆராய்ச்சியுரை வழங்கிச் சிலப்பதிகார இசைப்பாடல்களைத் தம் குழுவினருடன் கூடிப் பாடிக்காட்டி மகிழ்வித்தார்கள். அதைத் தொடர்ந்து தாவரவியல் அரங்கில் காரைக்குடி **கலைக்கோயில் நாட்டியப்பள்ளியின்** இயக்குநர் கலைமாமணி சிலம்பிசைச் செல்வி டாக்டர் எம்.எஸ்.சரளா அவர்கள் ***சிலம்பில் நாட்டியக் கூறுகளைப்*** பற்றிப் பேசித் தம் குழுவினருடன் சிலப்பதிகார **இசை நாட்டிய நிகழ்ச்சியை** வழங்கினார்கள். எல்லோர் மனத்தையும் கவர்ந்து மனமுவந்து பாராட்டைப் பெற்ற இந்நிகழ்ச்சியை அமைக்கத் தஞ்சை தென்னிந்தியப் பண்பாட்டு மையம் பொருளுதவி அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மார்ச்சு 18ஆம் நாள் காலை நடந்த **நாட்டுப்புறவியல் கண்ணோட்டத்தில் கண்ணகி வழிபாடு** என்ற மூன்றாம் அமர்விற்குத் திரு. டாக்டர் கணேசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அதில் டாக்டர் இராகவன் பையநாடு அவர்கள் தெய்வங்கள் இணைப்பு: கண்ணகி வழிபாட்டில் காளி வழிபாட்டுக் கலப்பு என்ற தலைப்பில் கட்டுரை படித்து வடகேரளத்தில் குரும்ப பகவதி கண்ணகி வழிபாடுகளின் இணைப்பை விளக்கினார். கண்ணகி பற்றிய கருத்து அங்கு வெறும் நம்பிக்கையாக மட்டுமே வழங்குவதாகவும் எடுத்துரைத்தார். டாக்டர் மா.நயினார் தென்திருவிதாங்கூரில் கண்ணகி வழிபாடு சக்தி வழிபாடாக மாறுவதையும் ஆற்றுகால் கோயில் போன்றவை கண்ணகியுடன் தம்மைத் தீவிரமாக இணைத்துக்கொள்ளும் அண்மைக்காலப் போக்குப் பற்றியும் விளக்கினார்கள். உள்ளூர் பரமேஸ்வரன் கேரள இலக்கியத்திலும் மரபுகளிலும் காணப்படும் கண்ணகி கதை வழக்குகள் பற்றி எடுத்துரைத்தார். கோவலன் சரித்திரம் கதைப்பாடல் பற்றிப் பேராசிரியர் மு.ச.சிவம் அவர்கள் கட்டுரை அளித்தார்கள். கல்வெட்டாய்வாளர் வெ.வேதாச்சலம் அவர்கள் கண்ணகி வழிநடந்த பாதையில் குறிப்பாக மதுரை முதல் நெடுவேள்குன்றம் வரை வைகைக்கரை வழியாக அமைந்த பாதையில் காணப்படும் தொல்பொருள் தடயங்களை எடுத்துரைத்து அது பழைய வணிகப் பெருவழி என்பதை விளக்கினார்.

நான்காம் அமர்வு ***சிலப்பதிகாரக் காலக் கணிப்பு மூலபாடம் நூலாராய்ச்சி*** பற்றியது. அதற்குத் தலைமை வகித்து டாக்டர் வெ. வேதாச்சலம் அவர்கள் நடத்தினார்கள். குணவாயிற் கோட்டத்தின் காலம் கி.பி. 8 அல்லது 9 ஆக இருக்கலாம் என்று பேராசிரியர் எம்.ஜி.எஸ்.நாராயணன் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் கருதுகிறார்கள். சிலப்பதிகாரக் காலம் கி.பி. 11ம் நூற்றாண்டு என்று டாக்டர் சி.கோவிந்தன் அவர்கள் படித்த கட்டுரை விவாதத்திற்கு உட்பட்டது. சிலப்பதிகார வரலாற்றுப் பின்னணி பற்றிக் கட்டுரை படித்த திரு.கே.சிவசங்கரன்நாயர் அவர்கள் மங்கலதேவிக் கோயிலே செங்குட்டுவன் கட்டிய கோயிலாக இருக்கலாம். அது தமிழ் மலையாள ஒருமைப்பாட்டின் சின்னம். எனவே அதை நன்கு பாதுகாக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

**சிலப்பதிகார ஆய்வுகளும் பார்வைகளும்** என்ற ஐந்தாவது அமர்வு பிற்பகலில் டாக்டர் இரா.காசிராஜன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சிலப்பதிகார மூலபாடத்திறனாய்வு சிலப்பதிகார மொழிநடை என்பன பற்றி முறையே டாக்டர் எஸ்.கணேசன் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் ஆகியோர் கட்டுரை படித்தனர். சிலப்பதிகாரத்திற்குச் செம்பதிப்பு ஒன்று வெளிக்கொணரவேண்டியது பற்றியும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் மலைநாட்டு வழக்குகள் பற்றியும் இருவரும் முறையே எடுத்துரைத்தனர். சிலப்பதிகாரத்தின் இலக்கியக்கோட்பாடும் காப்பியக் கட்டுமானமும் கலைப்படைப்பாக்கமும் என்ற தன் கட்டுரையில் டாக்டர். இந்திராமனுவல் சிலம்பு எப்படிச் சங்க மரபுகளை அடியொற்றிக் காப்பியப் புதுமைகளையும் இணைத்துக்கொள்கிறது என்பதை விளக்கினார்கள். சிலம்பின் மூன்று காண்டங்களிலும் ஒரு இலக்கிய ஒத்திணைவு உள்ளதையும் அவர் விளக்கினார். நாட்டார் வழிபாடுகளும் கண்ணகி வழிபாடும் என்ற தலைப்பில் டாக்டர் ஆ.சிவசுப்பிரமணியன் இவ்வரங்கில் தம் கட்டுரையை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த **கவியரங்கில்** மலையாளக் கவிஞர்கள் டாக்டர் தேசமங்கலம் இராமகிருஷ்ணன் பேராசிரியை லலிதா லெனின் தமிழ்க்கவிஞர்கள் டாக்டர் எஸ். மீனாட்சிநாதபிள்ளை திரு.எம்.முத்துராமன், கவிமாமணி ஜி.குமரேசன் மற்றும் தமிழ்த்துறை மலையாளத் துறையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கவிதை படித்து மகிழ்வித்தார்கள்.

தொடர்ந்து மாலை ஆறுமணிக்கு திருமதி மார்கி பி.எஸ்.சதிதேவி குழுவினர் நடத்திய **சிலப்பதிகார நங்கியார் கூத்து** நிகழ்ச்சி நடைபெற்றது. பேச்சின்றி வெறும் முத்திரைகள் அங்க அசைவுகள் இசை இவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒருவரே பல்வேறு கோலந்தாங்கி ஆடும் இக்கூத்தைப் பலவகை பாவங்களையும் உணர்ச்சிப் பெருக்குடன் வெளிப்படுத்தி திருமதி. சதிதேவி ஆடியது எல்லோர் பாராட்டையும் பெற்றது.

19ஆம் தேதி காலை கூடிய ஆறாம் அமர்வில் ***சிலப்பதிகாரம் ஒப்பீட்டு நோக்கில்*** என்ற அமர்விற்குப் பேராசிரியர் சு. வேங்கடராமன் அவர்கள் தலைமை வகி த்தார்கள். டாக்டர் இரா. காசிராசன் அவர்கள் தமிழிலும் பிறமொழிகளிலும் நிகழ்ந்துள்ள சிலப்பதிகார ஆய்வுகள் பற்றிய

அடைவும் மதிப்பீடும் பற்றிப் பேசினார். சிலப்பதிகார இலக்கியத் திறனாய்வு பற்றித் திரு.க.பஞ்சாங்கம் அவர்கள் விளக்கினார்கள். பேராசிரியர் ஜி.பாலமோகன் தம்பி அவர்கள் சிலப்பதிகாரத்தையும் வடமொழிக் காப்பியங்களையும் ஒப்பிட்டுச் சிலம்பில் மனிதன் தெய்வமாகிய கதை புதுமையானது என்றார். பேராசிரியர் க.செல்லப்பன் அவர்கள் சிலப்பதிகாரமும் கிரேக்க அவல நாடகங்களும் என்ற தலைப்பில் ஒப்பிட்டு அருமையான கருத்துக்களை எடுத்துரைத்தார். திரு.நேமி சாந்தகுமார் ஜெயின் அவர்கள் சமணமரபில் கண்ணகி போன்ற கற்புக்கரசியர் பற்றிய செய்திகளை எடுத்துரைத்தார்.

*சிலப்பதிகாரமும் பிறதுறைகளும்* என்பது பற்றிய ஏழாம் அமர்விற்குப் பேராசிரியர் க.செல்லப்பன் அவர்கள் தலைமை வகித்தார்கள். டாக்டர். இரா.திருமுருகன் அவர்கள் சிலப்பதிகாரத்தில் இசை பற்றி எடுத்துரைத்து அவற்றைப் பாடிக்காட்டி மகிழ்வித்தார்கள். திரு.அ.பு அறவாழி அவர்கள் சிலம்பில் சமண மதத் தத்துவக் கருத்துக்கள் என்ற தலைப்பில் பேசினார். **திரு.டி.மாதவமேனோன் அவர்கள் *சிலப்பதிகாரம் காட்டும் பொருளாதாரப் பின்னணி* என்ற தலைப்பில் சோழ பாண்டிய நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறிய பகுதிகளாகவும் சேரநாடு அவ்வளவு வளர்ச்சி பெறாத பகுதியாகவும் தெரிகிறதுஎன்று குறிப்பிட்டார்.** நாணய மாற்று பற்றிச் சிலம்பிலிருந்து தெரிந்துகொள்ளமுடியவில்லை. எனவே இது காலக்கணிப்பிற்கு உதவும் என்றார். கோவலன் மதுரைக்குள் முறையாக நுழையாமல் உட்புகுந்ததால் தான் பாண்டியனால் சந்தேகப்பட்டுக் கொல்லப்பட்டான். எனவே தென்னவன் தீதிலன் என்றார்.

பிற்பகல் நடைபெற்ற ***சிலப்பதிகாரம் இன்றைய கண்ணோட்டம்*** எட்டாம் அமர்வுக்கு டாக்டர் பி.விசாலாட்சி அவர்கள் தலைமை வகித்தார்கள். பேராசிரியர் சு.வேங்கடராமன் அவர்கள் சிலம்பில் வைணவ மற்றும் வைதிக சமயப் பின்னணி என்ற தலைப்பில் ஆய்வுரை அளித்தார்கள். அவர் சிலம்பு ஒரு இதிகாசமாக மாறுகிறதா? என்ற ஐயத்தை எழுப்பினார்கள். டாக்டர். சி. சுப்பிரமணியபிள்ளை சிலப்பதிகார உரை பற்றி ஆய்வுரை வழங்கினார். திரு.எம்.எம்.மீரான்பிள்ளை அவர்கள் சிலப்பதிகாரமும் பிற தமிழ்க்காப்பியங்களும் என்ற தலைப்பிலும் டாக்டர் காஞ்சனா பெண்ணிய நோக்கில் சிலம்பு என்ற தலைப்பிலும் கட்டுரை படித்தார்கள். சிலப்பதிகாரத்தில் இடப்பெயர்கள் பற்றி டாக்டர்

கி. நாச்சிமுத்து அவர்கள் கட்டுரை படிக்கும் போது சிலம்பிலுள்ள பழஞ் சேரநாட்டு வழக்குகளையும் எடுத்துரைத்தார்கள்.

பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவிற்கு பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புரை ஆற்றினார்கள். எழுத்தாளர் நீல பத்மநாபன், தென்மண்டலத்தொல்லியல் துறை மேற்பார்வை அதிகாரி டாக்டர் கே.கே.இராமமூர்த்தி, மலையாளப் பேராசிரியர் என். முகுந்தன், சமஸ்கிருதப் பேராசிரியர் டி.தேவராஜன் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் வ.விநாயகப் பெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கே.கே.இராமமூர்த்தி பேசும்போது ஆதிச்சநல்லூரில் அண்மை அகழ்வாய்வுகளில் சிலம்பைப் பிடித்திருப்பது போன்ற ஒரு காட்சி மட்பாண்டத்தில் காணப்படுவதாகவும் அது உறுதிப்படுமானால் கண்ணகி வழிபாட்டின் பழமை இன்னும் பல நூற்றாண்டுக்கு முன் செல்லும் என்றார். தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் காஞ்சனா வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர்.பீ. நசீம்தீன் நன்றியுரை நவின்றார்.

கருத்தரங்கை ஒட்டி சிலம்பு பற்றிய புத்தகக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கு கேரளப் பல்கலைக்கழகத்தில் இளங்கோ ஆய்விருக்கை நிறுவவேண்டிய தேவையை வற்புறுத்தியதோடு அதற்கான முயற்சிக்கு மேலும் உரமூட்டுவதாகவும் அமைந்தது. பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் அதற்காக ஐயாயிரம் ரூபாய் தன் பேத்தி பெயரில் நன்கொடை அளிப்பதாகவும் தெரிவித்தார்கள். அத்தகைய இருக்கை சிலம்பு கண்ணகி வழிபாடு பற்றிய மேலாய்வுக்குத் துணை செய்வதோடு இளங்கோவுக்கு நாம் காட்டும் மரியாதையாகவும் விளங்கும். மேலும் கேரளம் தமிழுக்கு ஆற்றிய பணிகள்ள எடுத்துரைத்துத் தமிழ் மலையாள ஒற்றுமையின் சின்னமாகவும் இது விளங்கும் என்று திருவாங்கூர் மாமன்னர் குறிப்பிட்டு வாழ்த்தினார்கள்.

***கி.நாச்சிமுத்து***
தமிழ்த்துறைத் தலைவர்,
கேரளப் பல்கலைக்கழகம்

# பெரிய புராணக் காப்பிய ஒருமை

## 6. அன்புப் பீடத்தில் ஆவிப்பலி

முனைவர் சுப. அண்ணாமலை

அன்பு வன்முறையில் வெளிப்படுதல், பெரியபுராணத்தில் இரண்டு வகையாக உள்ளது. ஒருவகை வெளிப்பாட்டைச் சென்ற இயலில் ஆராய்ந்தோம். அவ்வாறு புலப்படுத்திய தொண்டர்கள் மூவரும் வீர வாழ்வினர். அவருள் ஒருவர் அடியார்களுக்குத் தீங்கு செய்வோரை ஆயுதத்தால் கொன்று தண்டித்தலையே கொள்கையாகக் கொண்டிருந்தார். ஒருவர் வாட்போர் பயிற்றுவித்தலை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார். மற்றொருவர் விலங்கு வேட்டையன்றி, வேறு வாழ்க்கை அறியாத காட்டு வாழ்வினர். அவர்களிடம் அன்பு சுரந்ததும் அதிசயம்! அது எட்டிய எல்லைகளும் அதிசயம்!

மற்றொரு வகைத் தொண்டர்கள், இவர்களைப் போல் வீரம் நிரம்பிய வாழ்வினர் அல்லர் வெவ்வேறு தொழில்களை மேற்கொண்டோர். இறைப்பணியும் அடியார், பணியும் செய்தோர். எந்நிலை வரினும் எதை இழந்தும் பணியை விடாமல் செய்தோர். பணியில் சோதனை ஏற்பட்ட போது, அவர்கள் செய்ய முனைந்த உயிர்த்தியாகம் அன்பு வேட்கையின் வன்முறை வெளிப்பாடாக அமைந்தது.

முதல் வகைத் தொண்டர்களின் வரலாற்றில் **அன்பின் தன்மை** சிறப்பிடம் பெறுகிறது. அடுத்த வகைத் தொண்டர்களிடமோ, **தியாகச் சிந்தனை** மேலோங்கி நிற்கிறது.

"என்னையும் கொல்க" என்ற மன்னனிடமிருந்து உடனே வாளை வாங்கியது; மறுகணமே "அன்பனுக்குத் தீங்கு நினைத்தேன்" என்று தம் கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர்விடத் துணிந்தது - இவ் இரண்டிலும் எறிபத்தரின் **அன்பின் நுட்பத்தைப்** பார்க்கிறோம். பங்காளியின் வஞ்சகத்தைக் கருதிப் பார்க்காத **அன்பின் பெருந்தன்மையை** ஏனாதிநாதரிடம் காண்கிறோம். வாய்பேசாத குழந்தையின் பசியை, உணர்வுகளை நினைத்து நினைத்து நிறைவேற்றி குழந்தை அன்றி வேறு உலகம் இல்லாத **தாயன்பின் பரிவைக்** கண்ணப்பரிடம் காண்கிறோம்.

இனி, தொடர்ந்துவரும் தொண்டர்கள் அன்பு என்ற பலிபீடத்தில், நமது ஆவியைத் தியாகம் செய்ய முனைந்த சூழல்களைக் காண்போம்.

கலயனார் கடவூரில் வாழ்ந்த அந்தணர் திருக்கோயில் வழிபாட்டில் குங்கிலியத் தூபம் (சாம்பிராணி) இடும் பணியை மேற்கொண்டார். கடனைக் கழிப்பதுபோல் அப்பணியைச் செய்யவில்லை.

"வேணிப்பிரான் கழல்பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையராக"

அப்பணியைச் செய்தார் என்று சேக்கிழார் கூறுகின்றார். இந்த அடிகளில், வழிபாட்டு வேளையில் இறைவன் திருமுன் நிற்கும் கலயனாரை நம் கண் முன் நிறுத்துகின்றார் சேக்கிழார்.

திருவடியில் காட்டும் மணங்கமழும் குங்குலியப் புகை, அடிமுதல் சடைமுடி வரை மெல்லிய ஆடை விரித்தாற்போலப் படிகின்றது. அது நோக்கிக் கண்ணீர் சிந்தி, மனம் நைந்துருகி நிற்கும் கலயனாருக்கு, நேரம் செல்லச் செல்ல அன்பு பெருகி மனத்தின் ஆழத்திற்குச் செல்கின்றது. மனஉணர்வு மறையும்; சிந்தையின் உணர்வு சிதையாது என்பர். அதனாலேயே மணிவாசகர், "சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்" என்று பாடுகின்றார்.

சிந்தையில் அன்பு சிதையாமையால், கலயனார் வறுமையுற்றபொழுதும் தமது பணியைத் தொடர்ந்து செய்தார். அவ்வறுமை தொடர்ந்தமையால், நிலங்களையும், மதிப்புமிக்க பொருள்களையும் விற்றார். பணியாளரை நீக்கினார். வீட்டுப் பொருட்களையும் விற்றார். செல்வமெல்லாம் செலவாயின. மனையில் ஒரு மணி நெல் கூட இல்லை. பிள்ளைகளும் உறவினரும், கலயனாரும் மனைவியாரும் ஒருவேளை உண்பதற்கும் வழியில்லை.

அவர் மனையடுப்பில் புகை நின்றது. நமது குங்குலியப் புகையும் கோயிலில் நின்று விடுமே என்று, பசிவருத்தத்திற்கு மேல் மிகுதியாக வருந்தினார் கலயனார். மனையரசியார் குடும்பத்தாரின் பசித்துன்பம் பொறுக்கமாட்டாமல் வேறு வழி காணாமையால் தமது கணவனாரின் உயிரே எனக் கருதும் மங்கலநூல்தாலியை அவரிடம் கொடுத்து, "நெல் வாங்கிவாரும்" என்றார். அதைக் கொண்டு தெருவில் சென்றார் கலயனார்.

எதிரே ஒரு வணிகன் குங்கிலிய மூட்டை கொண்டு வந்தான். அது என்ன என்று அறிந்தபொழுது அவர், தம் மனைவியின் வேதனையை மறந்தார். குடும்பத்தாரின் பசியை - ஏன்? தமது பட்டினியையே மறந்தார். ஒரு கவனம் உண்ணவில்லையேல் எமன், அனைவரின் உயிரையும் பறிக்க நிற்பதைமறந்தார். சேக்கிழார் கூறுவது போல், முன்பு வழிபாட்டு வேளை சிலவற்றில் அவரது மனக்கண்ணில் தோன்றியவாறு அன்புடன் வணங்கி நின்ற மார்க்கண்டேயனின் உயிரைப் பறிக்க நின்ற எமனை உதைத்துக் கொன்ற பெருமானின் காட்சி இப்பொழுதும் தோன்றியிருக்க வேண்டும்.

உடனே தாலியை வணிகனிடம் கொடுத்து குங்கிலியத்தை வாங்கித் திருக்கோயில் சேர்த்து வழிபாட்டிற்காகக் காத்திருந்தார். அன்புப் பணிக்காக ஆவியைத் தியாகம் செய்ய நின்ற தொண்டரையும் அவர்தம் மனைவி மக்களையும் மாளவிடுவானோ பெருமான்? அவர் கோயிலில் இருந்த அதே நேரத்தில் அவர் இல்லத்தில் நிரம்பச் செல்வத்தை அருளினான்.

குங்கிலியக் கலயனார் மற்றொரு சூழலிலும் தமது உயிரைப் பணயம் வைத்து இறைப்பணி செய்தார். திருப்பனந்தாளில் சிறிது சாய்ந்துநின்ற சிவலிங்கத்தை மன்னனின் விருப்பத்தால், யானைகளும் சேனைகளும் சங்கிலி பூட்டி இழுத்து, இயலாமல் எய்த்து விழுந்தன. அது கண்ட கலயனார் அன்பால் மனமுருகி, "நானும் இவ்வாறு எய்ப்புற வேண்டும்" என இலிங்கப்பெருமானைக் கட்டிய பூங்கச்சினை, ஒரு கயிற்றால் தமது கழுத்தில் கட்டி இழுத்தார். 'கயிற்றால் இழுக்கவில்லை அன்புக் கயிற்றால் இழுத்தார்'. என்கிறார் சேக்கிழார். "அந்த அன்பு நெஞ்சத்தின் துன்பம் கண்டும் பெருமான் சாய்ந்து நிற்க முடியுமா?" என்று கேட்கிறார் அவர். கலயனாரின்அன்பை **"ஒருமை அன்பு"** என அவர் சிறப்பித்தலைக் காணவேண்டும். பெருமான் சாய்வு நீக்கி நேரே நிற்கும் செம்மையைக் காணும் அன்பை அன்றி, அவருள்ளத்தில் வேறு எண்ணம் இல்லை என்பது இதன் பொருள் 'ஒருமை எண்ணம்' என்று கூறினும் அகம்பாவம் என்ற பொருள் உண்டாகிவிடும். இத்தகைய அன்பால் தம்மையே பலிகொடுக்கத் துணிந்துவிட்டார் அத்தொண்டர்.

அடுத்து போற்றப்படுபவர் மானக்கஞ்சாறனார். இது இவரது இயற்பெயர் அன்று. மானம்-பெருமை கஞ்சாறு என்னும் ஊரினர் வேளாண் மரபினர் பற்பல அடியார்களைத் 'தோன்றினார்', 'வந்தார்', 'பிறந்தார்'

எனப் பொதுவாழக்கால் கூறும் சேக்கிழார் இவரை தேவாரம் பாடிய மூவர் முதலிகளை ஒப்பத் 'திரு அவதாரம் செய்தார்' எனக் கூறுகின்றார். காரணம், இவர் மெய்ப்பொருளுணர்வோடு வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் திருவருளை உணர்ந்து நடந்துகொண்டமையே ஆகும். அதனால் அவர் பற்றுக்களை எளிதாக வென்று, சமநிலை மனநோக்குடன் விளங்கி, ஏனை மக்களுக்கு வழிகாட்டியாக உள்ளார். இத்தகையோரையே "திரு அவதாரம் செய்தார்" எனச் சேக்கிழார் கூறுவார்.

மானக்கஞ்சாறனார்க்கு நெடுநாளாக மகப்பேறு வாய்க்கவில்லை. அதன் பொருட்டு அவர் தவமிருக்கவில்லை. இறைவனை வரம் வேண்டவில்லை. அவனது திருவருளைக் கூட வேண்டவில்லை. அத்திருவருளை எண்ணி வாழ்த்தினார். இதனைச் சேக்கிழார் "வருமகவு பெறல்பொருட்டு மனத்து அருளால் வழுத்தினார்" என்பர். வாழ்த்த வேண்டும் என்று திருவருளால் உணர்ந்து வாழ்த்தினார் என்பது இதன் பொருள் "வேண்டும் பரிசு ஒன்றுண்டெனில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்ற திருவாசகத்தை நினைக.

திருவருள் ஒரு பெண்மகவை அவருக்கு அளித்தது. அக்குழந்தை வளர்ந்து பருவமெய்தியவுடன் அவளுக்கு ஏயர்கோன் கலிக்காமன் என்பவரை மணம் பேசி முடிவு செய்தனர். மணமகனும் இறைத்தொண்டர். அவர் தம் சுற்றத்தாருடன் கஞ்சாற்றூரை அடையுமுன் ஒரு மாவிரத வைச முனிவர், மானக் கஞ்சாறனாரின் மனையில் புகுந்து, மணவறையை அடைந்தார். அவரை வரவேற்ற தொண்டர், எம்பிரானை விரும்பும் தவமுனிவர், விருந்தாக வரப்பெற்றேன் என்று அன்பால் மனமுருகிப் பணிந்தார். மணக்கோலம் பூண்ட தம் மகளையும் அழைத்து, முனிவரை வணங்கச்செய்தார். அவளது அடர்ந்து நீண்ட கூந்தலை நோக்கிய முனிவர், "இவள் மயிர் நமது பஞ்சவடிக்கு ஆகும்" என்று மானக்கஞ்சாறனாரிடம் கூறினார். அடியார் கேட்கும் முன் குறிப்பறிந்து கொடுப்பவர் மானக்கஞ்சாறர் முனிவரின் சொல்லைக் கேட்டதும், சிறிதும் தயங்காமல், அருமை மகளின் கூந்தலை அறுத்து முனிவரிடம் நீட்டினார். அதனை வாங்குபவர் போலக் கணநேரம் நின்ற முனிவர் உடனே மறைந்தார்.

இறைவனே இச்சோதனையை நிகழ்த்தினார் என்பது நிற்க. மகளின் கூந்தலை அவளது திருமண வேளையில் அறுக்க இத்தொண்டருக்கு எவ்வாறு மனம் துணிந்தது? பெண்களுக்கு கூந்தல் மங்கலப் பொருள். கணவனைக் கூந்தலுக்கு உரியவன் என்று கருதுதல் மரபு. அவ்வாறாதலின் கூந்தல் இழந்தவள் அமங்கலி ஆகிறாள். அவளை ஆடவன் மணக்கமாட்டான் இதனை அறிந்தும், ஒரு தந்தை தம் மகளின் கூந்தலை நீக்குவது, வாழ்வுரிமையை அவளுக்கு மறுப்பதாகுமே இது அவள் உயிரையே போக்குவதை ஒக்குமே

இவை எல்லாம் மகள் மீது தந்தை கொள்ளும் பற்றைச் சார்ந்த சிந்தனை அல்ல. ஆயினும் உலகியல் அறிவு சார்ந்த சிந்தனை. மானக்கஞ்சாறனாரோ திருவருளைச் சார்ந்து சிந்திக்கும் வழக்கம் உடையவர். முனிவரின் விருப்பத்தை அறிந்தபொழுது, அது திருவருள் குறிப்பு என்றே கருதினார். இயற்பகை நாயனாரின் மனைவியார், தம் கணவர் உலக நடைமுறைக்கு ஒவ்வாத செயலைக் கூறியபொழுது, இவ்வாறே திருவருள் குறிப்பு என்று கொண்டார். மானக்கஞ்சாறனார் திருவருள் வழிநின்றமையால் பற்றையும், உலகியலையும் வென்று சிறப்புற்றார். அருமை மகளின் உயிரையே அன்புக்காக அர்ப்பணிக்க முனைந்தார். கொடுத்தற்கு அரியவற்றைக் கொடுப்பவனை வள்ளல் என்பர். சேக்கிழார், பின்னர் மகளின் திருமணவிழாவின்போது நிகழப்போகும் மானக்கஞ்சாறனாரின் அரிய கொடையை முன்னதாக உளங்கொண்டு "மகட்பயந்த வள்ளலார்" என்று அவரைக் குறிப்பிடுகிறார்.

அடுத்து வருபவர் அரிவாட்டாயர் தாயனார் என்பது இயற்பெயர். அவரது அன்புத் தியாகத்தைக் குறிக்க 'அரிவாள்' என்னும் ஆயுதப் பெயர் அடைமொழியாக வந்தது.

அரியனவற்றை இறைவனுக்குப் படைத்தல் மக்கள் வழக்கம். காராம் பசுவின் பால், தாமரை மலர், வலம்புரிச் சங்கு, செந்நெல் முதலியவற்றைத் தாம் பயன்படுத்தாமல் இறைவனுக்குப் படைப்பர். அரிவாட்டாயர் கணமங்கலத்து இறைவனுக்கு நாள்தோறும் செந்நெல்லரிசிச் சோறும், செங்கீரைக் கறியும் மாவடுவும் படைப்பதைப் பணியாகக் கொண்டார்.

வறுமையுற்றார் ஆனால் பணியை விடவில்லை. தம் நிலத்தை விற்றார். கூலிக்கு நெல் அறுத்தார். செந்நெல் எங்கே அறுவடைக்கு உள்ளது என்று தேடி, அங்கே உழைத்து, கிடைத்த செந்நெல்லை இறைவனுக்குச் சோறாக்கிப் படைத்தார். கார் நெல் அறுத்துக் கூலி கொண்டு தமது குடும்பத்திற்கு அளித்தார்.

சில நாளில் எல்லா வயலிலும் செந்நெல்லே பயிராயிற்று. கூலியாகக் கிடைத்த நெல்லைத் தாம் உண்ணார் ஆதலின், இறைவனுக்குப் படைக்க நிறைந்த நெல் கிடைத்ததே என மகிழ்ந்து, வீட்டுத் தோட்டத்தில் முளைத்த கீரையைச் சமைத்து உண்டு, இறைப்பணியை விடாது செய்தார். அந்தக் கீரையும் பின்பு இல்லாதுபோயிற்று. வெறுந்தண்ணீர் மட்டும் பருகிப் பணியைத் தொடர்ந்தார்.

ஒருநாள் மனைவியார் திருமஞ்சனப்பொருள் சுமந்து உடன்வர, தொண்டர் தம் உயிரனைய படையல் பொருள்களைக் கூடையில் கொண்டு கோயிலுக்கு நடந்தார். பல நாளாகத் தண்ணீர் மட்டும் பருகி, வேலை செய்த மெலிவு மீதூர, கால்தளர்ந்து விழச் சாய்ந்தவரை, மனைவியார் பிடித்தார். தொண்டரின் தலையில் சுமந்த உணவெல்லாம் தரையில் ஒரு பிளவில் சிந்தின. "இனிக் கோயிலுக்குப் போவதால் என்ன பயன்? பெருமான் இன்று அமுது செய்ய நான் கொடுத்து வைக்கவில்லையே!" என்று துயரம் மிகுந்து உயிர்விடத் துணிந்து, அரிவாளைத் தமது கழுத்தில் வைத்து அறுக்கத் தொடங்கினார்.

தமது பசிக்கு வாடாத அந்த நல்ல நெஞ்சம், இறைவனது பசிக்கு வாடியது. உணவூட்ட இயலவில்லையே என்று ஆதங்கப்பட்டது. தாங்குமா இறைவனின் தாயுள்ளம்? பிளவிலிருந்து நீண்ட ஒருகை தாயனாரின் கையைப் பிடித்து நிறுத்தியது. அதேநேரம் மாவடுவைக் கடிக்கும் 'விடேல், விடேல்' என்ற ஓசையும் அங்கிருந்து. எழுந்தது. அன்பு கண்டால், ஆலயத்தில் மட்டுமன்றி, பிளவிலும் வந்திருந்து இறைவன் அமுது செய்வான்.

"அடியனேன் அறிவிலாமை கண்டும்
என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்து இங்கு
அமுதுசெய்பரனே போற்றி"

என்று தாயனார் கூற்றாகச் சேக்கிழார் போற்றுகின்றார். நாயனார், தாம் உண்ணுதலில் தம் உயிர்நிலை உள்ளது எனக் கருதவில்லை. மாறாக, இறைவன் அமுது செய்வதில் தான் நம் உயிர் நிலை பெறுகின்றது எனக் கருதினார். அதற்குத் தடைநேர்ந்தமையால், உயிரைப் பலியிடமுனைந்தார். இறைவன் இதனை உணர்ந்தே, தாயனாரின் கையைப் பிடித்தால் மட்டும் போதாது என்று, மாவடுவைக் கடிக்கும் ஓசையும் கேட்கச் செய்தார்.

அடுத்துப் போற்றப்பெறுபவர் ஆனாயர். மேல்மழ நாட்டு மங்கலம் என்னும் ஊரினர். பசுக்களைக் காக்கும் தொழிலினர் முன்னை அடியார்போல் இவர் வன்மைக் கருவி ஏதும் எடுக்கவில்லை. உயிரைப் பணயம் வைத்துப் பணிசெய்யவுமில்லை. ஆனால், நம் வாழ்க்கைக்கு உதவும் தொழிற்கருவியாக ஆயர்கள் பயன்படுத்தும் குழலிசைக் கருவியை, சிவபெருமானிடம் தம் மனத்தில் பெருகும் அன்பை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தினார். முல்லைநிலமே அவர் வழிபட்ட கோயில் இயற்கையே இறைவன் சன்னதி புல் வெளியிலும் பூக்காடுகளிலும் முரலும் வண்டுகளின் இன்னோசையே அவரது இசைவழிபாட்டுக்குத் தூண்டுகோல். அன்பால் நெகிழ்ந்து, நெகிழ்ந்து எலும்பெல்லாம் உருக, தம் உயிரையே இசையாக்கி, குழல்வழியே பெருகவிட்டார்.

"தம் பெருமான் அடி அன்புறு கானத்தின்
மேவு துளைக் கருவிக் குழல் வாசனை மேற்கொண்டார்"

என்று சேக்கிழார், ஆனாயரின் உயிர் அவர் நாள்தோறும் வாசித்த இசையினால் அன்புமயம் ஆவதையும் அந்த இசையும் 'அன்புமயம்' ஆவதையும் 'அன்புறு கானம்' என்ற ஒரு தொடர் கொண்டே புலப்படுத்துகிறார்.

ஆனாயர், தாம் அன்புமயமானதற்கு ஏற்பச் சிவபெருமானது திருப்பெயரான ஐந்தெழுத்தில் ஈடுபாடு கொண்டு, அதற்கு இசையமைத்து வாசித்துவரும் வழக்கம் உடையவரானார். உயிர்களுக்குக் கருணை இயற்கைக் குணம். ஆவினம் காக்கும் மரபால் ஆனாயரிடம் கருணை மிகுந்திருந்தது. இறைவன் திருப்பெயரைப் பண்ணில் இட்டு அவர் வாசித்த

இசை, அன்புமயமாக ஒலித்ததோடு, அதில் கருணையும் இணைய, அதைக் கேட்ட மக்கள் உள்ளிட்ட உயிரினர்கள் யாவும் சொல்லொணாத அமைதிவயப்பட்டன. ஆனாயரைச் சூழ்ந்திருந்த பிரபஞ்சத்தின் இயக்கமே சற்று நேரம் நின்று போனது என்கிறார் சேக்கிழார்.

"தடுத்தசரா சரங்கள் எலாம் தங்கவரும் தம் கருணை
அடுத்த இசை யமுதளித்து"

என்பது அவர் கூற்று, 'தடுத்த' என்பது ஒன்றைஒன்று தடுத்த என் விரிக்கப்படும். இயங்குவனவும் நிற்பனவுமான உயிரினங்களுக்கு முறையேபுறஇயக்கமும் அக இயக்கமும் உண்டு. மற்றொன்றோடு சந்திக்காமல், இயக்கம் நடைபெறாது. இச் சந்திப்பைச் சேக்கிழார் இங்குத் 'தடுத்த' எனச் குறியிட்டார். இதனால் பெறவைத்த பொருள், இயக்கம் இயக்கம் நிற்க என்பதை "தங்க" என்றார்.

ஆனாயரின் இசையமுது உயிரினங்களின் எலும்பினுள்ளே புகுந்து, உயிரை உருக்கியதாம். மழைக்கால நாளொன்றில், ஆவினமும் ஆயர்களும் சூழக் காட்டிற்குச் சென்றஆனாயர், கொன்றைமரமொன்று முழுதும் மலர்ந்து, பூக்கள் மாலை மாலையாய்த் தொங்க, மதுவுண்ட வண்டுகள் சுற்றிச் சூழ்ந்து முரன்று நிற்க, விளங்கும் காட்சியைக் கண்டனர். சட்டென்று இறைஅனு பூதி (Divine Mystic Experience) பெற்றார். அதாவது, அங்குச் சிவபெருமானையே கண்டு, அக்காட்சியில் சிந்தை ஒன்றினார்.

"மன்றல் மலர்த் துணர் தூக்கி மருங்குதாழ் சடையார் போல்
நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்று உருகி
ஒன்றிய சிந்தை" - என்பது சேக்கிழார் கூற்று.

கொன்றைமரம் அவர் கண்ட காட்சி. ஆதனால் அவரது அகக்கண்ணுக்குத் தோன்றிய காட்சி, சிவபெருமான். அதனால்தான் 'நோக்கி' என்றசொல்லைப் பெய்கிறார் சேக்கிழார். இங்கு 'அகக்கண்' என்பது மெய்யுணர்வு. "உணர்வின் நேர்பெறவரும் சிவபோகம்" எனத் திருஞான சம்பந்தர் வரலாற்றிலும் "மெய்யுணர்வு நேர்பட்ட போதில் அலைப்பட்ட ஆர்வ முதல் குற்றம்போல் ஆயினார்" என ஏனா திநாத வரலாற்றிலும் அவர் கூறுவது காணலாம்.

உணர்வின் பக்குவத்திற்கு ஏற்ப, அன்பின் அளவு வேறுபடும் இயல்பாகவே இறையுணர்வு மிகுந்த ஆனாலருக்கு மெய்யுணர்வால் அன்பு மடைதிறந்த வெள்ளமாய்ப் பெருகியது. எது அவரிடம் இசையாகவே வடிவங்கொள்ளும். அவரது குழலோசை, கற்பக மலர்களின் தேனும் பாற்கடல் அமுதும் கலந்தது போல் சுற்றிலும் நின்றஉயிரினங்களின் செவிகளை நிறைத்தது.

பிரபஞ்சமே அங்கு ஈர்க்கப்பட்டது. அவரது இசையில் ஒன்றியது. இசைமயமாயிற்று ஆடவுமில்லை அசையவும் இல்லை. பறவை இனங்களும் விலங்கினங்களும் தம் பகை மறந்து கருணைவயப்பட்டன. காற்றுங்கூட மெல்லெனவே தவழ்ந்தது. இறைவன் விரும்புவது அன்புதானே? ஆனாயர் தம் ஆவியை அன்புமயமாக்கி அர்ப் பணித்ததை அவன் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பானோ?

இவ் ஆன்ம ஒப்பளிப்பும் முன்னைத் தொண்டர் மூவரின் ஆவிப்பலியோடு ஒத்தது ஆதலின், அவர்தம் வரலாற்றுடன் ஒருங்கு வைக்கப்பட்டது.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ.கந்தசாமி

டாக்டர்.ந.சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். இ.கி. இராமசாமி

திரு. சே. அரிராமநாதன்

திரு.வே. திருவரங்கராசன்

திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484